# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 3 ஜூலை – செப்டம்பர் 1997 இதழ் 3

*சத்தியத்தை சில காலம் மறைத்து வைக்கலாம்; அதை மாற்றிப் போதிக்கலாம் அல்லது விற்கக் கூட முனையலாம், ஆனால் ஒரு போதும் அதை அழித்துவிட முடியாது என்பதை இப்பத்திரிகை வாசகர்கள் எமக்குத் தொடர்ந்து நினைவுறுத்தி வருகிறார்கள். சத்தியத்தை வளர்ப்பதும், அதற்காகப் போராடுவதும் நமது கடமை. அதேநேரம் அதை விற்க முனையும் போலிகளை அடையாளம் காண்பதும் நமது பணிகளில் ஒன்று. சத்தியத்தை மறைத்து, திரிபுபடுத்தி அதற்குப் புது விளக்கம் கொடுக்கும் போல் யொங்கி சோவை இவ் விதழில் அடையாளம் கானலாம். இம் மனிதரின் போதனையால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் இதனை வாசிக்க வேண்டியது அவசியம். அதேநேரம் சத்தியத்தைப் போதிக்கும் பெரும் பணிக்கு தேவ அழைப்பு எவ்வாறு வருகிறது என்று ஆராயும் ஒரு கட்டுரையையும் இவ்விதழில் கானலாம். ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களும், ஊழியத்தை நாடுபவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு தலைப்பு இது. இதுவரை வந்த இதழ்களைப்போல் இதுவும் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க வல்ல தேவன் பேரருள் புரிவாராக! - ஆசிரியர்.*



# திருமறைத்தீபம்

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. எழுதிக் கேட்கும் எவருக்கும் பத்திரிகை சந்தா எதுவுமின்றி இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ஏனையோருக்கு பத்திரிகையை அறிமுகப்படுத்தி வைப்பதன் மூலம் வாசகர்களும் இவ்வூழியத்தில் பங்கு கொள்ளலாம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Tel & Fax:** 64 9 527 1522
**E-mail:** bala@ihug.co.nz

**கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கள் என்றுதான் கூற வேண்டும்.**

*- சி. எச். ஸ்பர்ஜன் (1834-1892)*

# போல் யொங்கி சோ


## — *நான்காம் பரிமாணம்* —

போல் யொங்கி சோ தென் கொரிய நாட்டின் பிரபலமான பரவசக்குழுவைச் சார்ந்த பிரசங்கி. தென் கொரியாவின் தலை நகரான சியோலில் ஏழரை இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட பூரண சுவிசேஷ சபையின் தலைமைப் போதகராக யொங்கி சோ இருந்து வருகிறார். உலகின் மாபெரும் கிறிஸ்தவ சபையின் போதகர் என்று பரவசக் குழுவினரால் கருதப்பட்டு வரும் யொங்கி சோ உலகமெங்கும் பயணம் செய்து தனது கொள்கைகளைப் பரப்பி சபை வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இதனை நான் எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் யொங்கி சோ நான் வாழும் நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரில் "அசெம்பிளி ஆப் கோட்" சபையில் தனது கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்.

இவ்வளவு தூரம் யொங்கி சோ பிரபல்யமடையக் காரணம் என்ன? அவரது வெற்றியின் இரகசியம் என்ன? பரவசக்குழுவினர் அவரது கோட்பாடுகளைப் பின்பற்றி அவரைப்போல வாழ்கையில் சாதனைகள் செய்ய முயலுமளவுக்கு அவர் சாதித்தது என்ன? இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் தமிழகத்து தினகரன் முதல் பல பரவசக்குழுவைச் சார்ந்த தலைவர்களும் அவரது காலில் விழுந்த நிகழ்ச்சி கடந்த வருடம் மெரினாவில் நடந்ததே! அதன் மர்மம் என்ன? யொங்கி சோ நமது ஆராய்ச்சியை இலகுவாக்கி தானே இதுபற்றி விபரமாக ஒரு நூலில் எழுதியுள்ளார். "நான்காம் பரிமாணம்" என்று அழைக்கப்படும் இந்நூல், தமிழில் அழகாக அச்சடிக்கப்பட்டு தமிழர்கள் மத்தியில் விற்பனையாகி வருகிறது. இதன் ஆங்கிலப் பிரதியை நான் பல வருடங்களுக்கு முன்பு வாசித்திருக்கிறேன். அதன் தமிழ்ப்பிரதியை கடந்த வருடம் நண்பர் ஒருவர் மூலமாகப் பெற்று வாசிக்க முடிந்தது. உண்மையில் கூறப்போனால் நான் இதுவரை இவ்வளவு மோசமானதொரு நூலை வாசித்ததில்லை என்றே கூற வேண்டும். வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி சிந்திக்க மறுப்பவர்கள் ஏமாந்து போவதற்கு எது காரணம் என்பதை இந்நூல் தெளிவாக விளக்குகின்றது.

### *விசுவாசத்திற்கு யொங்கி சோ கொடுக்கும் விளக்கம்*

கிறிஸ்துவின் மேல் தான் வைத்திருக்கும் விசுவாசமே தனது வெற்றியின் இரகசியம் எனக்கூறும் யொங்கி சோ விசுவாசத்தைப் பற்றித் தனது நூலில் விளக்குகிறார். வேதமோ, விசுவாசம் என்பது நம்பப்படுபவைகளில் இருக்கும் உறுதி என்று போதிக்கின்றது. ஆனால் யொங்கி சோ விசுவாசமென்பது, நாம் விரும்பும் பொருட்களை கடவுளின் பெயரால் நிச்சயமாக அடைவதற்கான வழி என்று நம்புகிறார். ஆகவே, நாம் விரும்பும் பொருட்களை இவ் விசுவாசத்தின் மூலம் பெற்றுக் கொள்வதெப்படி? என்று யொங்கி சோ கூறும் வழிமுறையைப் பார்ப்போம். (அ) நாம் விரும்பும் பொருட்களில் நமக்குத் தெளிவு இருக்க வேண்டும்.




**போல் யொங்கி சோ உலகிலேயே மிகப் பெரிய சபையான கொரியாவின் யொய்டா பூரண சுவிஷேச சபையின் போதகர். 1958 இல் ஆரம்பமான இவ் ஊழியம் மூன்று வருடங்களுக்குள் 1500 பேர் இருக்கக்கூடிய சபைக்கட்டிடத்தை சொந்தமாகப் பெற்றது. 1984 இல் சபையில் 500,000 அங்கத்தவர்கள் இருந்தனர். 1991 இல் இத்தொகை 700,000 ஆக உயர்ந்தது. 2000 ஆண்டுக்குள் இத்தொகையை ஒரு மில்லியனாக உயர்த்துவது சபையின் நோக்கம். டாக்டர் பீட்டர் மாஸ்டர்ஸ், யொங்கி சோவின் இறையியற் கோட்பாடுகள் வரலாற்று பூர்வமான கிறிஸ்தவத்தைவிட்டு விலகி நிற்பதாகக் கூறுகிறார். யொங்கி சோவின் போதனைகள் புத்த மதத்தையும், யோகப் போதனைகளையும் தழுவியவை. அந்நிய மதங்களைத் தழுவிய ஆபத்தான போதனைகளை யொங்கி சோ தொடர்ந்து போதித்து மக்களை ஏமாற்றி வருகிறார்.**

அதாவது அப்பொருள், உதாரணத்திற்கு ஒரு வீடாக இருக்குமானால் அதற்குள் எத்தனை அறைகள் இருக்க வேண்டும், வீடு என்ன நிறத்தில் இருக்க வேண்டும், அது சிறிய வீடாக இருக்க வெண்டுமா? அல்லது பெரிய வீடாக இருக்க வேண்டுமா? என்பது போன்ற விபரங்கள் எல்லாம் நமக்குத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் நமக்கே உறுதியும், தெளிவுமற்ற பொருட்களை, கடவுள் எப்படித் தரமுடியும் என்கிறார் யொங்கி சோ. தெளிவில்லாமல் நாம் எதையும் கேட்பதால்தான் அநேக தடவைகள் நமது ஜெபங்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்படுவதில்லை என்பது அவரது வாதம். ஆகவே நமக்கு எது தேவையோ அதைப் பற்றிய முழு விபரமும் நமக்குத் தெரிந்திருப்பதோடு, அதுதான் வேண்டும் என்ற பிடிவாதமான உறுதியும் நமக்கு இருக்க வேண்டும் என்கிறார் சோ. நமக்குத் தேவையான அந்தப் பொருளை நாம் மனத்தில் படம்பிடித்து வைத்திருப்பது அவசியம். ஏனெனில் அப்போதுதான் இதுதான் நமக்குத் தேவை என்று கடவுளுளாலும் புரிந்து கொள்ள முடியும். (ஆ) அடுத்ததாக, அதைக் குறித்த அனல் பற்றும் வாஞ்சை நமக்கு இருக்க வேண்டும். அதை எப்படியும் அடைய வேண்டும் என்ற வெறி அவசியம். (இ) அத்தோடு, அது நமக்குக் கிடைக்கும் என்ற நிச்சயம் நம்மில் ஏற்பட வேண்டும். அந் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ள நாம் உறுதியோடு ஜெபிக்க வேண்டும். (ஈ) இறுதியாக நாம் விசுவாச வார்த்தைகளைப் பேச வேண்டும். அதாவது இது நடக்கும் என்று இயேசுவோ அல்லது அப்போஸ்தலர்களோ கட்டளையிட்டு பேசிய வார்த்தைகளை நாம் நம்பி அவற்றை நாமும் கட்டளையிட்டு பேச வேண்டும்.

இந்நான்கு வழிகளும்தான் கடவுளிடமிருந்து நாம் எதையும் பெற்றுக் கொள்ள யொங்கி சோ காட்டும் இலகுவான பாதை. இதை விபரிக்கும் சிரிப்புக்கிடமான கதைகளையும் அவர் தன் நூலில் தருகிறார் (பக்கங்கள் 9-28). தனது ஊழிய ஆரம்ப காலத்தில் வறுமையில் வாடியபோது எவ்வாறு தான் விரும்பிய கட்டில், மேசை, நாற்காலி, சைக்கிள்களைப் பெற்றுக் கொண்டார் என்று விளக்குகிறார் சோ. "ஆறுமாதங்கள் இவற்றிற்காகப் பெரிதும் ஜெபித்து அவை கிடைக்காததால் நான் மனம் உடைந்து போயிருந்தேன். ஒருநாள் மிகக் கவலையோடு ஓரிடத்தில் அமர்ந்து நான் அழுது கொண்டிருந்தபோது திடீரென கடவுள் சமீபத்தில் இருப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. கடவுள் மெதுவான குரலில், மகனே, உன்னுடைய ஜெபத்தை நான் எப்போதோ கேட்டுவிட்டேன் என்றார். நான் உடனே துள்ளிக்குதித்து அப்படியானால் நான் கேட்டதை நீங்கள் ஏன் தரவில்லை? என்றேன். அதற்குக் கடவுள், என்னுடைய பிள்ளைகளோடு எப்போதுமே தொல்லைதான்; அவர்கள் எதையும் விளக்கமாகக் கேட்பதில்லை. மேசை, சைக்கிள் கேட்டாயே, ஆனால், உலகத்தில் எத்தனைவிதமான மேசைகள், சைக்கிள்கள் இருக்கின்றன என்று உனக்குத் தெரியுமா? நீ, மேசை, சைக்கிள் வேண்டும் என்று மட்டும்தான் கேட்டாய் ஆனால், அவை எந்த நாட்டில் செய்யப்பட்டவை, என்ன நிறத்தில் வேண்டும் என்றெல்லாம் கேட்கவில்லையே என்று கடவுள் கேட்டார். அன்றுதான் என் வாழ்வில் ஒரு

(9 ஆம் பக்கம் பார்க்க)

**சபையில் முதிர்ச்சியும் அனுபவமும் கொண்ட சகோதரர்களின் சோதனைக்குத் தம்மை ஒப்புக் கொடுக்க மறுப்பவர்கள் பிரசங்க ஊழியத்திற்கு தகுதியற்றவர்கள் என்றே கூற வேண்டும்.**

# ஊழிய அழைப்பு!

கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபடுபவர்கள் அவரது அழைப்பைப் பெற்றிருக்க வேண்டும் என்பது திருமறையின் தெளிவான போதனை. பழைய ஏற்பாட்டிலும் சரி புதிய ஏற்பாட்டிலும் சரி இவ்வாறாக கர்த்தரால் அவரது ஊழியத்திற்காக அழைக்கப்பட்ட பலருடைய உதாரணங்களைக் காணலாம்.

### ஊழிய அழைப்பு என்பது என்ன?

ஊழியத்திற்கான அழைப்பைக் குறித்து பேசுபவர்கள் பொதுவாகக் கொண்டிருக்கும் எண்ணங்களுக்கும் வேதம் அதைக்குறித்து போதிக்கும் போதனைகளுக்கும் பெரும் வித்தியாசமுண்டு. வேதத்தைப் படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு வசனத்தால் உந்தப்பட்டு கர்த்தர் தம்மை ஊழியத்திற்கு அவ்வசனத்தின் மூலம் அழைக்கிறார் என்று உணர்ச்சி வசப்பட்டு ஊழியத்திற்குப் போனவர்கள் அநேகர். அறையில் தனிமையில் இருக்கும்போது கர்த்தர் தன்னோடு பேசி அழைத்ததாகவோ, அல்லது ஊழியப்பணிக்குத் தான் போகத்தான் வேண்டும் என்று கர்த்தர் அழைப்பது தனக்குப் புலப்பட்டதாகவும் கூறி ஊழியம் செய்யப் போனவர்களின் தொகை எண்ணிலடங்காது.

ஊழிய அழைப்பை ஒருவர் உணர முடியாது என்று நான் வாதிடவில்லை. ஆனால் ஊழிய அழைப்பு என்பது வெறும் உணர்ச்சிகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. அது கர்த்தருடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும் என்ற, கர்த்தரால் நமக்குள் ஏற்படுத்தப்படும் உள்ளார்ந்த நம்பிக்கை. ஆனால், இத்தகைய நம்பிக்கையை கடவுள் ஒருவருக்குள் எவ்வாறு ஏற்படுத்துகிறார்? ஒருவரது உள்ளத்தில் ஊழிய வாஞ்சையை ஆழமாக விதைப்பதன் மூலமும், ஏனைய சகோதரர்களின் உள்ளத்திலும் அதைப்பதிய வைப்பதன் மூலமும், வேதம் போதிக்கும் ஊழியத்திற்கான அடையாளங்களையெல்லாம் கொண்டிருக்கும் அவரை சபையாரின் சோதனையில் தேர்ச்சிபெற வைப்பதன் மூலமும், கடவுள் ஒருவரை ஊழியத்திற்கு அழைக்கிறார். இவற்றில் சபையாரின் அங்கீகாரத்தை ஒருவர் பெறுவது மிக அவசியம். ஏனெனில் சுயநலநோக்கத்தோடு, பொருளாசையுடன் ஊழியத்தில் ஈடுபட முனைபவர்களை இதன் மூலம் தடை செய்யலாம். அத்தோடு, ஆணவம், தன்னலமுள்ள சுயநம்பிக்கை, பிறரின் பாராட்டை நாடும் மனப்பாங்கு, பிரசங்க ஊழியம் பற்றிய தவறான, குழந்தைத்தனமான எண்ணங்கள் ஆகியவற்றைக் கொண்டிருப்பவர்களையும் தவிர்க்கலாம். சபையில் முதிர்ச்சியும் அனுபவமும் கொண்ட சகோதரர்களின் சோத னைக்குத் தம்மை ஒப்புக் கொடுக்க மறுப்பவர்கள் பிரசங்க ஊழியத்திற்கு தகுதியற்றவர்கள் என்றே கூற வேண்டும்.

**கடவுள் நமக்குக் கொடுத்திராதவைகளைக் கொண்டிருப்பதாகப் பெருமை பாராட்டுவது எவ்வளவு தவறோ அதேபோல், கர்த்தர் நமக்கு உண்மையில் கொடுத்துள்ள கிருபைகளையும் வரங்களையும் அங்கீகரிக்க மறுப்பதும் போலித் தாழ்மையாகும்.**

### பிரசங்க ஊழியத்திற்கான தகுதிகள்

புதிய ஏற்பாட்டின் இரண்டு முக்கிய வேதப்பகுதிகள் *(1 தீமோத்தேயு 3:1-7 & தீத்து 1:6-10)* இவ்வூழியத்திற்கான அடையாளங்களை விபரிக்கின்றன. ஊழியத்தை நாடுபவர்கள் இவ்விரண்டு பகுதிகளையும் கவனத்தோடு படிக்க வேண்டும். ஊழியத்தை நாடுபவர் சபையாரோடு சேர்ந்து இவ்வடையாளங்கள் தன்னில் காணப்படுகின்றனவா என்று மனச்சுத்தத்துடன் ஆராய்ந்து பார்த்தல் அவசியம். இது இலகுவான காரியமல்ல. உதாரணமாக ஊழியத்திற்கு பெரு மதிப்புக் கொடுக்கும் ஒருவர் தகுதிகள் இருந்தும் அதற்குத் தன்னை ஒப்புக் கொடுக்கத் தயங்கலாம். ஊழியப் பணிக்குத்தான் தகுதியானவனல்ல என்று எண்ணிப் பின்வாங்கலாம். இச்சந்தர்ப்பத்தில் முதிர்ச்சியுள்ள சபையாரின் எண்ணங்களுக்கு மேலான மதிப்புக் கொடுத்து பின்வாங்குபவர்கள் ஊக்கப்படுத்தப்படல் அவசியம். கடவுள் நமக்குக் கொடுத்திராதவைகளைக் கொண்டிருப்பதாகப் பெருமை பாராட்டுவது எவ்வளவு தவறோ அதேபோல், கர்த்தர் நமக்கு உண்மையில் கொடுத்துள்ள கிருபைகளையும் வரங்களையும் அங்கீகரிக்க மறுப்பதும் போலித் தாழ்மையாகும்.

கர்த்தருடைய சபை ஊழியங்கள் அனைத்திற்கும் அவசியமான இலக்கணங்களை வகுத்துக்கூறும் வேத பகுதிகள் 1 தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்களில் அடங்கியுள்ளன. சிலர் இவை சபை கண்காணிகளுக்கும், உதவியாளர்களுக்கும் மட்டுமே உரித்தான இலக்கணங்களை எடுத்துக் கூறுவதாக எண்ணலாம். திருச்சபையில் இன்று காணப்படும் இரு நிரந்தரமான ஊழியங்கள் இவை இரண்டும் மட்டுமே. ஆனால் இவ்விலக்கணங்கள் அனைத்து ஊழியங்களுக்கும் உரித்தானவை. அந்நோக்கத்துடனேயே பவுல் இவற்றை இங்கு தந்துள்ளார்.

*1 தீமோத்தேயு 3:1-7* உம் *தீத்து 1:6-10* உம் அடங்கிய வேதப்பகுதிகள் ஊழியப்பணிக்கான இருபதுவகையான இலக்கணங்களை விபரிக்கின்றன. இவற்றில் பதினேழு இலக்கணங்கள் ஒருவரது நடத்தைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஏனெனில் ஒருவரது திறமையும், கிருபை வரங்களும் அவசியமானதாக இருந்தாலும் அவரது நன்நடத்தை மிக முக்கியமானதாகும்.

இவ்விரு வேத பகுதிகளும் ஊழியப்பணிக்கான

இலக்கணங்களை விளக்க ஆரம்பிக்கும்போது முக்கியமான ஒரு விடயத்தைக்கூறி ஆரம்பிப்பதை நாம் கவனிக்கத்தவறக்கூடாது. *1 தீமோத். 3:2* இலும் *தீத்து 1:7* இலும் இதைப்பார்க்கலாம். இவ்விருபகுதிகளும் ஊழியத்திற்கு வருபவர்கள் அனைவரும் இவ்விலக் கணங்களைத் 'தவறாது' கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகின்றன. கிரேக்க மொழியில் 'dei' என்று அழைக்கப்படும் இவ்வார்த்தை ஆங்கிலத் தில் 'must' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ் வார்த்தை இவ்விலக்கணங்களின் தவிர்க்க முடியாத அவசியத்தை நமக்கு வலியுறுத்திக் காட்டுகின்றன. இவ்விலக்கணங்கள் ஒவ்வொன்றையும் விபரமாகப் பார்ப்போம்.

**1. குற்றஞ்சாட்டப்படாதவனாக இருக்க வேண்டும்.** *(1 தீமோ.3:2; தீத்து 1:6, 7)* - இது ஒரு ஊழியக்காரரின் வாழ்க்கையில் பொதுவாக எதிர்பார்க்கப்படும் குணாம்சம். அவரது வாழ்க்கை எக்குற்றச்சாட்டு களுக்கும் அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அவலட்சணமான காரியங்களுக்கோ, அட்டூழியங் களுக்கோ இடமிருக்கக்கூடாது.

**2. ஒரே பெண்ணை மனைவியாகக் கொண்டிருக்க வேண்டும்.** *(1 தீமோ.3:2; தீத்து 1:6)* - இப்பகுதி ஒரு ஊழியக்காரர் திருமணம் செய்தவராகவோ அல்லது ஒரு முறை மட்டுமே திருமணம் செய்தவராகவோ இருக்க வேண்டும் என்பதைவிட அவர் தம் மணவாழ்வில் உண்மையுள்ளவராக இருக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது. இன்று திருச்சபைப் பிரசங்கிகளையும், தலைவர்களையும் பெரிதாகப் பாதித்து வரும் தீங்கு முறையற்ற பெண் தொடர்பாகவே இருக்கின்றது. சபை சரித்திரத்தை ஆராய்ந்தால் போலிப் போதனைகளுக்கு அடுத்தபடியாக திருச்சபையின் சாட்சியையும், திருச்சபை மக்களையும் அதிகமாகப் பாதித்துள்ள கேடு சபைத்தலைவர்களுடைய முறையற்ற பெண் தொடர் பாகவே இருந்துள்ளது. போதகர்களும், சபைத் தலைவர்களும் தங்களுடைய மணவாழ்க்கையில் அதிக கவனம் செலுத்தி தம் மனைவிமார்களுக்கு உண்மை யுள்ளவர்களாக இருக்க வேண்டும். அநேக போதகர் களும், ஊழியக்காரர்களும் ஊழியத்தைப் பெரிதாகக் கருதி தங்களுடைய குடும்பவாழ்க்கையில் இன்று அக்கறை செலுத்துவதில்லை. மணம் வீசும் மண வாழ்க்கையைக் கொண்டவர்கள் மற்ற பெண்களை நாட மாட்டார்கள்.

**3. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிற வனாயிருக்க வெண்டும்.** *(1 தீமோ.3:4-5; தீத்து 1:6)* - அதாவது குடும்பத்தலைவனாகவிருந்து தன் மனைவி மக்களைக் கர்த்தரின் வார்த்தையின்படி வழி நடத்து கிறவனாயிருக்க வேண்டும். அவர்களது தேவைகளை அன்போடு கவனித்து, பராமரித்து வருபவராக இருக்க வேண்டும். ஊழியக்காரர்களின் பிள்ளைகள் கீழ்ப்படி வுள்ளவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். குடும்பத் தலைவர்கள் நேரத்திற்கு மதிப்புக் கொடுத்து தங்கள் மனைவி, பிள்ளைகள் வீட்டிலும், சபையிலும் நேரப்படி காரியங்கள் செய்து மற்றவர் களுக்கு வழிகாட்டியாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். போதகர்கள், சபைத்தலைவர்கள் இதில் ஏனையோருக்கு வழிகாட்ட வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கின்றது. குடும்பத்தில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கொண்டுவர இயலாதவர்கள் சபை நடத்தவோ பிரசங்கிக்கவோ தகுதியற்றவர்கள.

**4. தன் இஷ்டப்படி நடக்காதவனாக இருக்க வேண்டும்.** *(தீத்து 1:7)* - ஊழியக்காரர்கள் கர்த்தரால் அழைக்கப்பட்டு கர்த்தரின் மக்களை ஆவிக்குரிய செயல்களில் வழிநடத்தி அவர்களுக்குப் பாதுகாவலர் களாக இருக்க வேண்டியவர்கள். ஊழியக்காரர்கள் தம்மைத் தாமே தெரிவு செய்து கொள்ளவொ, தம்மைத் தாமே சிபாரிசு செய்து கொள்ளவோ கூடாது. தன் இஷ்டப்படி அதிகாரம் செலுத்தி தனது ஊழியத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. தனது சுய இச்சைப் படியல்லாது கர்த்தருடைய வார்த்தையின்படி அவரது சித்தத்தை எப்போதும் செய்பவர்களாக இருக்க வேண்டும். ஊழியக்காரர்கள் கர்த்தரின் பிரிதிநிதிகளாக இருந்து சேவை செய்ய வேண்டுமே தவிர சபையை ஆட்டிப்படைக்க முனையக்கூடாது.

**5. முற்கோபமுடையவனாகவும், சண்டைக்காரனாக வும் இருக்கக்கூடாது.** *(1 தீமோ.3:3; தீத்து 1:7)* - வெகு சீக்கிரம் ஆத்திரமடைந்து, வம்புச் சண்டையிலிறங்கு கிறவன் ஊழியத்திற்குத் தகுதியற்றவன். இது வாய்ச் சண்டையாக இருந்தாலும், கைச்சண்டையாக இருந்தாலும் போதக, பிரசங்க ஊழியத்திற்கு ஏற்றதல்ல. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில், கர்த்த ருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாக இல்லாமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும் தீமையை சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும் என்று கூறுவதைப் பார்க்கலாம்.

**6. மதுபானப்பிரியனாக இருக்கக்கூடாது.** *(1 தீமோத்தேயு 3:3; தீத்து 1:7)* - இவ்வசனத்தின் மூல வார்த்தை மதுபானத்தின் பக்கத்திலேயே காலத்தைக் கழிக்கும் ஒருவனைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மது பானத்தைத் தனது நண்பனாகக் கொண்டு, அதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறவன் ஊழியக் காரனாக இருக்க முடியாது. மதுபானத்தில் சுகத்தையும், தமது ஊழியத்திற்கான பலத்தையும் அடைய முயற்சிக்கிறவர்கள் கிறிஸ்தவர்களை வழி நடத்தத் தகுதியற்றவர்கள். இன்று கிறிஸ்தவ சுதந்திரத்தின் பெயரில் சில ஊழியக்காரர்கள் மதுபானத்தில் சுகம் காண முயற்சிக்கிறார்கள். இவர்களால் திருச்சபைக்கு ஆபத்து!

**7. அடிக்கிறவனாக இருக்கக்கூடாது.** *(1 தீமோ.3:3; தீத்து 1:7)* - சுலபமாக கைநீட்டுவதை வழக்கமாகக் கொண்டவன் கர்த்தரின் சபையை ஆட்டிவைக்க முனையும் சண்டைக்காரன். ஆனால், கர்த்தரின் ஊழியக்காரன் பொறுமையுள்ளவனாய் எச்சந்தர்ப் பத்திலும் நிதானத்தை இழக்காது எக்காரியத்தையும் முறையாய்த் தீர்த்து வைக்க முனைவான்.

**8. பணஆசை உள்ளவனாய், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாய் இருக்கக்கூடாது.** *(1 தீமோ.3:3; தீத்து 1:7)* - இன்று கிறிஸ்தவ ஊழியத்தைப் பலரும் நையாண்டி செய்யும் நிலைக்கு கொண்டுவந்து, வீழ்ந்திருக்கும் பல ஊழியக்காரர்களின் நிலைக்கு அவர்களுடைய பண ஆசையே காரணம். மேலைத்தேய வாழ்க்கைத்தரத்தால்

# கிறிஸ்தவ ஊழியத்திற்கான இலக்கணங்கள்

*— சார்ள்ஸ் பிரிட்ஜஸ் —*

ஊழியம் ஆவிக்குரிய ஊழியமாக அமைய வேண்டுமானால் ஊழியத்தில் ஈடுபடுகிறவர்களில் ஆவிக்குரிய குணாதிசயங்கள் நிறைந்திருக்க வேண்டியது அவசியம் என்பதை நாம் ஆரம்பத்திலேயே கூறிவிட வேண்டும். எவ்வளவுதான் உலக ஞானமும், இலக்கிய வளமும் நிரம்பியவராக ஒருவர் இருந்த போதும் ஆவிக்குரிய குணாதிசயங்கள் அவரில் நிறைந்திருக்காவிட்டால் அவரது கல்வியால் ஊழியத்திற்கு எந்தவித பயனுமில்லை. வேதம், ஊழியக்காரன் பரிசுத்தமானவனாக இருக்க வேண்டும் என்று சரியாகவே வலியுறுத்திக் கூறுகின்றது. 'இன்றைய இளைஞர்கள் வேறு காரியங்களில் நேரத்தைச் செலவிடுவதைவிட எபேசிய சபைக் கண்காணிகளுக்கு பவுல் தந்த அறிவுரைகளைப் படிப்பதில் பன்னிரண்டு மாதங்களைச் செலவிடுவது மேலான செயல்', என்று கூறும் ரிச்சட் பெக்ஸ்டர் தொடர்ந்து, 'ஓ! சகோதரர்களே, பவுலின் வார்த்தைகளை உங்கள் படிப்பறைக் கதவுகளில் எழுதி வையுங்கள், உங்கள் கண்களில் எப்போதும் படும்படியாக பெரிய எழுத்துக்களில் எழுதி வையுங்கள். அவற்றில் இரண்டு மூன்று வரிகளைத் தெளிவாக அறிந்திருந்தாலே எத்தனை உண்மையுள்ள பிரசங்கிகளாக நாம் மாறலாம்! அவையனைத்தையும் உங்கள் இருதயங்களிலே பதியும்படியாக எழுதி வையுங்கள், ஏனெனில் இவை, இருபது வருடங்களில் நீங்கள் கற்றிருக்கும் காரியங்களைவிட உங்களுக்கும், உங்கள் சபைக்கும் மேலானதைச் செய்ய முடியும். நீங்கள் கற்றிருக்கும் கல்வி மற்றவர்களின் கைத்தட்டல்களை உங்களுக்குப் பெற்றுத்தந்தாலும் இவற்றோடு ஒப்பிடும்போது அவை உங்களை வெறும் ஓசையெழுப்பும் மணிகளாக மட்டுமே மாற்ற முடியும்' என்று கூறுகின்றார். ஆகவே, இக்கிறிஸ்தவ ஊழியம், ஊழியக்காரனுக்கு கிறிஸ்துவில் ஆழமான பற்றும் அனுபவமும் இருப்பதோடு, அவை அன்றாடம் அவனது சுயவெறுப்புப் பயிற்சியில் வெளிப்பட்டு, கிறிஸ்துவிலும், கடவுளை அறியாதவர்களிடமும் அவன் காட்டும் அன்பிலும் தென்பட வேண்டும். அத்தோடு அவை அவனது தொடர்ச்சியான குற்றமற்ற நடத்தையிலும் தோற்றமளிக்க வேண்டும் என்று பெரிதும் எதிர்பார்க்கிறது.

*இது சார்ள்ஸ் பிரிட்ஜஸ் (1794 - 1869) எழுதிய 'கிறிஸ்தவ ஊழியம்' என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி. கிறிஸ்தவ ஊழியத்தைக் குறித்த நூல்களில் இதற்கு சமமானதொன்றில்லை.*

பாதிக்கப்பட்டு தன் நிலைமையை மீறி, தான் ஊழியம் செய்யும் மக்களின் நிலைமையையும் மீறி வாழ்ந்து அநேகர் ஊழியத்தில் தவறிழைத்திருக்கிறார்கள். ஊழியத்தின் மூலம் எவ்வளவு பணம் சேர்க்கலாம் என்ற நோக்கம் கொண்டவர்கள் ஊழியத்தை நாடக்கூடாது. ஒருவன் பணத்திற்காக எதையும் செய்பவனாகத் தென்படுகிறானா? எந்நேரமும் பணத்திலேயே குறியாக இருக்கிறானா? தன் நிலைமையையும், தான் ஊழியம் செய்யும் மக்களின் நிலைமையையும் மீறி வாழ முயற்சிக்கிறானா? அடிக்கடி பணத்தைப் பற்றியே பேசுகிறானா? என்று ஊழியத்தை நாடுபவர்களை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். பணத்தை கடவுளாகக் கருதும் ஒருவன் கர்த்தரைத் துதிக்கும் மக்களை வழி நடத்த முடியாது.

**9. ஒருவன் புதிய விசுவாசியாக இருக்கக்கூடாது.** *(1 தீமோ.3:6)* - அதாவது ஒரு புதிதாக விதைக்கப்பட்ட விதையாக இருக்கக்கூடாது. புதிதாக விதைக்கப்பட்ட விதை சரியாக நிலத்தில் பதிந்து துளிர்விட காலமெடுக்கும். அதேவேளை பலவிதமான ஆபத்து களையும் தாங்கக்கூடிய வல்லமையும் அதற்கு இல்லை. அதேபோல், ஒரு புதிய கிறிஸ்தவன் வளருமுன் அவனுக்குப் பெரும் பொறுப்புக்களைக் கொடுப்பதால் அவனுக்குத் தன்னைப்பற்றிய மேலான எண்ணம் ஏற்பட்டு ஆணவமுள்ளவனாக மாறிவிடும் ஆபத்து உண்டு. பொறுப்புக்களைக் காலம் வருமுன் ஒருவருக்குக் கொடுப்பதால் அவரை அழித்துவிடக்கூடிய ஆபத்து உண்டு. முறையான ஊழியத்திற்கு தாழ்மை பெரிதும் அவசியம். திருமறையின்படி, இதுவே கிறிஸ்தவ ஊழியத்தின் மிக விசேடமான அம்சமாகக் கருதப்படுகிறது (மாற்கு 10:35-45). இத்தகைய தாழ்மை வளர புதிய கிறிஸ்தவனுக்கு காலமும், கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சியும் மட்டுமே துணை புரிய முடியும். அதற்குமுன் பெரும் பொறுப்புக்களை அவன் மேல் திணிப்பது அவனுக்கோ அல்லது ஊழியத்திற்கோ நன்மை பயக்காது.

இதுவரை நாம் பார்த்த இலக்கணங்கள் எதிர் மறையானவை. அதாவது ஒருவன் எதைச் செய்யக் கூடாது? எப்படி இருக்கக்கூடாது என்று இவை எடுத்துக் கூறுகின்றன. ஊழியத்தை நாடுபவர்கள் சுத்த மனச்சாட்சியுடன் மனந்திறந்து இவ்விலக்கணங்கள் தனக்குப் பொருந்தி வருகிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அ. கர்த்தருடைய சித்தத்தின்படி வாழ்வதை மட்டுமே நான் நோக்கமாகக் கொண்டிருக்கின்றேனா?

ஆ எனக்கு சுலபமாக கோபம் வருகிறதா?

இ. மதுபானத்தில் எனக்கு ஆசை உண்டா?

ஈ. மற்றவர்கள் என்னை நாடிவரப் பயப்படுகிறார்களா?

உ. எனக்குப் பண ஆசை உண்டா?

ஊ. மற்றவர்களை வழி நடத்துமளவுக்கு எனக்கு முதிர்ச்சி உண்டா?

(மிகுதி அடுத்த இதழில்)

# கிருபையின் போதனைகள்

கிருபையின் போதனைகளின் முக்கிய அம்சங்களைத் தொடர்ந்து ஆராய்ந்து வரும் நாம் கடந்த இதழில் பாவத்தினால் மனிதன் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையைக் குறித்துப் பார்த்தோம். இவ்விதழில் மூன்றாவது அம்சமாகிய கிறிஸ்துவின் பரிகாரப்பலியைக் குறித்து சிந்திப்போம்.

### 3. கிறிஸ்துவின் பரிகாரப்பலி

சுவிஷேசத்தின் அடித்தளம் என்று அழைக்கப்படக் கூடிய அம்சம் கிறிஸ்துவின் மரணத்தின் நோக்கமாகும். கிறிஸ்துவின் கல்வாரி மரணம் தற்செயலாக நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியல்ல. உலகத் தோற்றத்திற்கு முன்பாக கடவுளால் தீர்மானிக்கப்பட்டபடி இவ்வுலகில் பிறந்து, வாழ்ந்து, மரித்த கிறிஸ்து எந்தவித ஒரு நோக்கமோ குறிக்கோளோ இல்லாது மரித்தார் என்று எண்ணுவது தவறு. கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிக் கூறும் ஸ்பர்ஜன், இதைப் புரிந்து கொள்வதில் நாம் தவறிழைப்போமானால் அது நாம் விசுவாசிக்கும் கடவுளைப் பற்றிய கோட்பாடுகள் அனைத்தையும் பாதித்துவிடும் என்றார். கிறிஸ்து பாவிகளாகிய மனிதர்களை மீட்பதற்காக மரித்தார் என்று நம்புபவர்கள்கூட அவர் மரணத்தின் தாற்பரியம் என்ன? அவர் யாருக்காக மரித்தார்? என்பதைப் புரிந்து கொள்வதில்தான் தவறிழைத்து விடுகிறார்கள்.

எல்லா மனிதர்களுமே பாவிகளாக இருக்கும்போது, எல்லோரையும் இரட்சிக்கக்கூடிய மகத்துவத்தையும், வல்லமையையும் கொண்ட கிறிஸ்து தன் மரணத்தின் மூலம் ஏன் அனைவரையுமே இரட்சிப்பதை நோக்கமாகக் கொள்ளவில்லை என்று வேதம் நமக்குத் தெரிவிப்பதில்லை. ஆனால், எல்லா மனிதர்களும் இரட்சிப்பை அடைவதில்லை என்று வேதம் நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. வேதம் கிருபையின் மூலமாக மட்டுமே ஒருவர் இரட்சிப்பைப் பெற முடியும் என்று கூறுகிறது. தகுதியெதுவுமே இல்லாத மனிதர்களுக்குக் கடவுள் காட்டும் கருணையே கிருபையாகும். ஏதாவது ஒரு தகுதியின் அடிப்படையில் மனிதன் இரட்சிப்பை அடைய முடியுமானால் அவர்களில் ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியைப் பார்த்து, "எமக்குக் கிடைத்த கிருபையின் அழைப்பு உங்களுக்கும் கொடுக்கப்பட்டது, ஆனால், நாங்கள் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டோம், நீங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆகவே, நீங்கள் எந்த சாக்குப் போக்கும் சொல்ல முடியாது" என்று கூற நேரிடும். ஆனால், இது உண்மையல்ல, ஏனெனில், எந்தவொரு மனிதனும் தன்னைப் பாராட்டிக் கொள்ள இயலாத வகையில், "தமது கிருபையின் மூலம் கடவுளே தங்களை இரட்சித்தார்" என்று இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் நித்தய காலமும் அவருக்கு விசுவாசமாக இருக்கும்படி கடவுள் இரட்சிப்பை ஏற்படுத்தியுள்ளார் *(எபேசியர் 2:8-10).*

கல்வினீய, சீர்திருத்தவாதிகள் மனிதனுடைய வீழ்ச்சியை சாதாரணமானதாக எண்ணுவதில்லை. மனித வீழ்ச்சியைப் பற்றிய தவறான எண்ணத்தைக் கொண்டிருப்பதால்தான் ஆர்மீனியவாதிகள், மனிதன் தனது சித்தப்படி, தனது வல்லமையைப் பயன்படுத்திக் கடவுளிடம் சேர்ந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சீர்திருத்தவாதிகள் மனித சித்தத்தின் வீழ்ச்சி என்பது மனிதனைப் பீடித்திருக்கும் சாதாரன குறைபாடல்ல அது அவனது ஆவிக்குரிய வாழ்வின் மரணத்தைச் சுட்டிக்காட்டுகின்றது என்று விசுவாசிக்கின்றார்கள். அத்தோடு கிறிஸ்துவின் பரிகாரப்பலியானது மனிதர் கடவுளை அடையும்படி அவர்களுக்கு வசதியானதாக ஏற்படுத்தப்பட்டதொன்றல்ல என்றும் நம்புகிறார்கள். சீர்திருத்தவாதிகளைப் பொறுத்தவரையில் எவருக்காக கிறிஸ்து மரித்தாரோ அவர்கள் கடவுளை அடையும்படியாக, அவர்களுக்கு எதிராக இருந்த அனைத்து சட்டரீதியான தடைகளையும் வரலாற்று நிகழ்ச்சியான கிறிஸ்துவின் மரணம் அகற்றியது. அதுமட்டுமல்லாமல் இவ்வாறாக கிறிஸ்து தன் மரணத்தின் மூலம் பெற்றெடுத்த இரட்சிப்பைப் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் மக்களுக்கு அளிக்கிறார்.

கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்த மூன்றுவித கோட்பாடுகள் பொதுவாக வழங்கி வருகின்றன.

1. கிறிஸ்து எவ்வித வேறுபாடும் காட்டாமல் எல்லா மனிதர்களையும் இரட்சிப்பதற்காக மரித்தார்.

2. குறிப்பிட்ட எவரையுமே இரட்சிப்பதற்காக கிறிஸ்து மரிக்கவில்லை.

3. குறிப்பிட்ட மக்களை இரட்சிப்பதற்காக மட்டும் கிறிஸ்து மரித்தார்.

முதலாவது கோட்பாட்டைப் பின்பற்றுபவர்களை "யூனிவர்சலிஸ்ட்ஸ்" என்று அழைப்பர். இக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்து எல்லா மனிதர்களையும் இரட்சிப்பதற்காக மரித்தாரென்றும், ஆகவே மனித குலமனைத்தும் இரட்சிப்பை அடையுமென்றும் போதிக்கின்றது. இரண்டாவது கோட்பாடு, கிறிஸ்து எல்லா மனிதர்களும் இரட்சிப்பை அடையக்கூடியவகையில் அதனை ஏற்படுத்தினார் என்று போதிக்கின்றது. முதலாவதை விட இது எவ்வகையில் வேறுபடுகிறதெனில், எல்லா மனிதர்களும் இரட்சிப்பை அடையாவிட்டாலும், அதைப் பெற்றுக் கொள்ளும் தகுதியும் வல்லமையும் ஒவ்வொருவருக்குமிருப்பதாக இது போதிக்கின்றது. இதுவே ஆர்மீனியக் கோட்பாடாகும். கிறிஸ்து எல்லோருடைய

பாவத்துக்காகவும் தன்னைப் பலியாகக் கொடுத்த தாகவும், அவரது பரிகாரப் பலியின் பலனை ஒரு மனிதன் அவரை ஏற்றுக் கொள்வதாகத் 'தீர்மானம்' எடுத்துப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் இது போதிக்கின்றது. கிறிஸ்துவின் பரிகாரப்பலி பற்றிய மூன்றாவது கோட்பாடு, கிறிஸ்து, எவரெவர்மீது பிதா தனது தெரிந்து கொள்ளும் அன்பைச் செலுத்தி னாரோ அவர்களனைவரையும் இரட்சிக்கும்படியாக உறுதியாகவும், தீர்மானமாகவும் அவர்களுக்காக மட்டும் பரிகாரப்பலியாக தன்னை சிலுவையிலே ஒப்புக் கொடுத்தார் என்று போதிக்கின்றது. இவ்வா றாக பிதாவால் தெரிந்து கொள்ளப்பட்ட வர்களின் கடனைச் செலுத்தி, அவர்களுக்காக பிதாவின் நீதியைச் சந்தித்து, இறுதியில் தனது நீதியை அவர்க ளுடைய கணக்கில் வைத்து அவர்கள் தன்னில் பூரணராகும்படிச் செய்தார் என்பது இதன் போதனை. இதுவே சீர்திருத்தவாதிகள் விசுவாசிக்கும் கல்வினீயப் போதனை.

ஆகவே, கிறிஸ்துவின் மரணம் இம்மூன்று காரணங் களில் ஒன்றிற்காக மட்டுமே நிறைவேறியிருக்க முடியும். ஒன்று, எல்லோரையும் இரட்சிப்பதற்காக; அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட நபரையும் இரட்சிப் பதற்காக அல்ல; அல்லது, குறிப்பிட்ட ஒரு தொகை யினரை இரட்சிப்பதற்காக மட்டுமே. இவற்றில் மூன்றாவதே "வரையறுக்கப்பட்ட பிராயச்சித்தம்" அல்லது "குறிப்பிட்டவர்களுக்கான மீட்பு" என்று அழைக்கப்படும் கல்வினீயப் போதனை. கிறிஸ்து குறிப்பிட்ட மக்களை மீட்பதற்காக மரித்தார், அதா வது உலகத் தோற்றத்திற்கு முன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை மீட்பதற்காக (எபேசியர் 1:4), தமது பிதாவால் உலகத்திலிருந்து தமக்குக் கொடுக்கப் பட்ட மக்களை மீட்பதற்காக (யோவான் 17:9) மரித்தார். தாமே கூறியபடி, யாருக்காக தமது இரத் தத்தைச் சிந்தினாரோ அவர்களுக்காக மரித்தார் (மத்தெயு 26:28).

நாம் இங்கே கிறிஸ்துவின் மரணத்தைக்குறித்த இரு போதனைகளை எதிர் நோக்குகின்றோம். ஒன்று, கிறிஸ்துவின் மரணத்தை மிக உயர்ந்த பயனுள்ள பூரணமாக நிறைவேறிய பரிகாரப்பலியாகக் காண் கிறது. இதுவே சீர்திருத்தவாதத்தின் போதனை யாகும். இரண்டாவது, கிறிஸ்துவின் மரணத்தை எல்லோருக்கும் பயன்படக்கூடிய ஆனால், பூரணமற்ற பரிகாரப்பலியாகக் காண்கிறது. இரண்டாவதில் உள்ள தவறென்னவெனில் அது கிறிஸ்துவின் பரிகாரப்பலியை அரைகுறையாக நிறைவேறிய தொன்றாகக் காட்டுகிறது. ஆகவே, கிறிஸ்துவின் மரணம் எவரையும் இரட்சிக்கும் வல்லமையற்றது என்ற எண்ணத்தை இது தோற்றுவிக்கின்றது. ஆர்மீனி யக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்து வின் மரணத்தின் பலனை, வேதப்போதனைகளுக்கு முரணாக, எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்க முன் வருவதன் மூலம் அவரது பரிகாரப்பலியை பிரயோ சனமற்றதாக மாற்றிவிடுகிறார்கள்.

மேலாக, கடவுள் அனைத்து மனிதர்களின் பாவத்தை யும் கிறிஸ்துவில் தண்டித்திருந்தால், அது இழந்து போனவர்களின் பாவத்தை இருமுறை தண்டித்தது போலாகிவிடும். முதலில் கிறிஸ்துவிலும் பின்பு இன்னுமொருமுறை அவர்களிலும் தண்டித்தது போலாகிவிடும். இது நீதிக்குப் புறம்பானது. கிறிஸ்து அவர்களின் பாவக்கடனை அடைத்திருந்தால், அவர்கள் விடுதலை அடைந்து, பரிசுத்த ஆவியால் மனமாற்றத்தையும், விசுவாசத்தையும் பெறும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பார்கள். ஆகவே, அனைவருக்குமான பரிகாரப்பலி என்ற போதனை வேதத்தோடு பொருந்தாத அசட்டுவாதமாகும்.

கிறிஸ்து, ஆறு மணி நேர சிலுவை மரணத்தை தனது சரீரத்தில் மட்டுமல்லாது முழு மனிதனாக, ஆவியி லும், மனத்திலும் அனுபவித்தார். அவர், உண்மையில் நரகத்துன்பங்கள் அனைத்தையும் தன்னில் அனுபவித் தார். கடவுளிடம் இருந்து பிரிக்கப்பட்டு, விரும்பப் படும் நன்மையான அனைத்திலும் இருந்து பிரிக்கப் பட்டார். இதுவே நரகத்துன்பமாகும். நமது புலன் களுக்கு அப்பாற்பட்ட பெருந்துன்பம் இது. ஆனால், கிறிஸ்து தேவ-மனிதனாக சிலுவைத் துன்பத்தை அனுபவித்ததால், அது, அவரது மக்கள் அனைவரும் நிலையாக நரகத்தில் பட்டிருக்க வேண்டிய துன்பங் கள் அனைத்தையும் நீதியுடன் நிவர்த்திக்கக்கூடியதாக இருந்தது. அதுமட்டுமல்லாது, கிறிஸ்துவால் மீட்கப் பட்ட மனிதன், தான் ஆதாமின் பாவத்தால் இழந் ததைவிட மேலானதைக் கிறிஸ்துவின் மீட்புப் பணி யின் மூலம் அடைகிறான். ஏனெனில், கிறிஸ்து மனித உருவெடுத்துப்பிறந்ததோடு, தனது மகிமை நிலையில் மனித சுபாவத்தை என்றும் கொண்டிருக்கப் போகி றார். இதனால்தான் பேதுரு தனது நிருபத்தில், நாம் இப்போது திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர் களாகும்படி வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறோம் (2 பேதுரு 1:4) என்று கூறுகிறார். ஆகவே, நாம் தேவ தூதர்களையும்விட மேன்மையுள்ள இடத்தைக் கிறிஸ்துவின் மீட்புப்பணியின் மூலம் அடைந்திருக்கி றோம்.

## இனிவரும் இதழில்:

## தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு

**அடுத்த இதழில் ஜேம்ஸ் அடம்ஸ் எழுதிய "தீர்மானத்தின் மூலம் மறு பிறப்பு" என்ற நூலின் தமிழ் வடிவத் தைத் தரவிருக்கிறோம். பல இடங்க ளிலும் இன்று பரவலாகக் காணப்படும் தீர்மானம் எடுக்க வைப்பதன் மூலம் மக்களைக் கிறிஸ்தவர்களாக்கும் முயற்சி முறையானதா? அது வேதத் தின் அடிப்படையில் அமைந்ததா? என்று இந்நூல் ஆராய்கிறது.**

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி . . .*

திருப்பம் ஏற்பட்டது.'' அதற்குப்பின் எவ்வாறு தான் விளக்கமாக ஜெபிக்க ஆரம்பித்ததாகக் கூறும் சோ, நீண்ட சிந்தனைக்குப்பின், பிலிப்பீன்ஸ் நாட்டில் செய்யப்பட்ட மேசை, இரும்பாலான, காலில் சக்கரங்கள் கொண்ட நாற்காலி, அமெரிக்க நாட்டில் செய்யப்பட்ட சைக்கிள் ஆகியவை வேண்டும் என்று அன்று முதல் தான் ஜெபிக்க ஆரம்பித்ததாகக் கூறுகிறார்.

போல் யொங்கி சோவின் போதனையின்படி விசுவாசமென்பது நாம் விரும்புவதை அடைவோம் என்ற நம்பிக்கையுடன், அவற்றைப்பற்றித் தொடர்ந்து கனாக்கண்டு கர்த்தரிடம் மன்றாடி எப்படியாவது ஒருவழியில் அவற்றை அடைவது என்று பொருள். யொங்கி சோ தன் நூலில், தாம் விரும்புவதை ஒருவர் மனத்தில் படமிட்டு (Visualize) அதை அடையும்வரை அதைப்பற்றிக் கனாக்காண வேண்டும் என்று அடிக்கடி போதிக்கிறார். இதற்கு இவர் பயன்படுத்தும் இன்னுமொரு வார்த்தை Incubate என்பதாகும். அதாவது, மனத்தில் தொடர்ந்து நாம் விரும்பும் பொருளைப் படம் பிடித்து வந்தால் அது இறுதியில் விசுவாசத்தால் உயிர்பெறும் என்பது இவரது போதனை.

### வேதம் போதிக்கும் விசுவாசம்

ஆனால் இவற்றில் ஏதாவது உண்மை இருக்கிறதா? என்று பார்ப்பதே நமது நோக்கம். முதலில் விசுவாசத்தைப் பற்றி வேதம் என்ன போதிக்கின்றது என்று பார்ப்போம். எபிரேயர் 11:1 இல் ''விசுவாசம் நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது'' என்று வாசிக்கிறோம். இதன் பொருளென்ன? விசுவாசமென்பது, நித்திய ஜீவன், கிறிஸ்துவில் நமது ஆவிக்குரிய வளர்ச்சி, கடவுளோடு நமது ஐக்கியம் ஆகியவற்றில் நமக்குள்ள நமபிக்கையைக் குறிப்பதாகும். ஏனெனில் இவற்றிற்கெல்லாம் விசுவாசமே ஆதாரமும் தூணுமாயிருக்கிறது. இவையனைத்தும் நிச்சயமாக கிறிஸ்தவர்களுக்கு சொந்தமானாலும், விசுவாசம் இவற்றில் நமக்குப் பெரும் நம்பிக்கையை உண்டாக்குகின்றது (ரோமர் 4:17–25; அப்போஸ். 27:21-25). அது மட்டுமல்லாது விசுவாசம், நாம் கண்ணால் காண முடியாத, ஆனால் உறுதியாக நம்புகின்ற கர்த்தரின் நித்திய திட்டங்கள், அவற்றைக் கொண்டு நடத்தும் அவரது பராமரிப்பு, நமது உயிர்த்தெழுதல், எதிர்கால நித்திய தண்டனை, நித்திய மகிமை ஆகியவற்றைக் குறித்து நமக்குப் பெரும் நம்பிக்கையை அளிக்கின்றது. விசுவாசமென்பது, வெறும் உணர்ச்சிமயமான அசட்டுத்தனமான ஒரு நம்பிக்கையல்ல; அது, வேதத்தில் கடவுளைப் பற்றித் தெளிவாக விளக்கப் பட்டுள்ள காரியங்களில் நமக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். வேதத்தைப் பொறுத்த வரையில் இதுதான் விசுவாசம்.

ஆனால், யொங்கி சோ விசுவாசத்திற்கு வேத வசனங்களைப் பயன்படுத்தி, வேதத்தின் அடிப்படையில் அல்லாத, வேதத்திற்குப் புறம்பான ஒரு விளக்கத்தைத் தருகிறார். அவரைப் பொறுத்தவரையில் விசுவாசம் என்பது நாம் அடைய விரும்பும் எப்பொருளையும் நிச்சயமாக நாம் அடையலாம் என்று நம்புவதாகும். அது வேத ஆதாரமற்ற, குருட்டுத்தனமான ஒரு நம்பிக்கையே (Optimism) தவிர, இதற்கும் கர்த்தரின் வார்த்தைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

யொங்கி சோ கடவுளைப்பற்றி சரியான வேத அறிவைக் கொண்டிருக்கவில்லை. கடவுளுக்கு நமக்கு எது தேவை என்று சரியாகத் தெரியாது என்று அவர் கூறுகிறார். ஆனால், வேதமோ நமது தலையிலுள்ள மயிர்களின் எண்ணிக்கையும் கடவுளுக்குத் தெளிவாகத் தெரியும் என்று போதிக்கின்றது. எல்லா உயிர்களின் தேவைகளையும் அறிந்து வைத்திருப்பவர் கடவுள் மட்டுமே. ஆகவே நமது தேவைகள் அனைத்தையும் கடவுள் சரியாகத் தெரிந்து வைத்திருக்கிறார். அத்தோடு, ஒரு மனிதன் விரும்பும் பொருட்களுக்கு எல்லையே இல்லை. அவ்வாறு அவன் விரும்பும் பொருட்களை எல்லாம் நிச்சயமாக கடவுள் தருவார், தர வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. நமக்குத் தேவையானவற்றை கடவுள் சரியானவேளையில் தருவார் என்று தான் வேதம் போதிக்கின்றது. ஆகவே நமது தேவைகளை நாம் கடவுளிடத்தில் ஜெபத்தில் ஏறெடுத்து பொறுமையாக அவற்றை அவர் நிறைவேற்றித் தரும்வரை காத்திருக்கப் பழக வேண்டும். சிலவேளைகளில் நாம் கேட்பது கிடைக்காமல் போகலாம். அதற்காக நாம் கடவுளைக் குறை கூறவோ, அல்லது நமது விசுவாசத்தில் நம்பிக்கை இழக்கவோ கூடாது. ஏனெனில் அவை கிடைக்காமல் போவதற்கு நமது நம்பிக்கை குறைவோ அல்லது கடவுளின் இயலாமையோ காரணமல்ல. எல்லாம் அறிந்த கர்த்தர் நம் நன்மைக்காகவே நாம் கேட்டதைத் தரவில்லை என்று நம்பி தொடர்ந்து அவரை விசுவாசிப்பவனே மெய்க்கிறிஸ்தவன்.

### வேதத்தில் காணப்படும் கர்த்தரின் வாக்குறுதிகள்

வேதத்தில் 8000 திற்கும் மேலான வாக்குறுதிகள் இருப்பதாகக்கூறும் யொங்கி சோ அவற்றை நாம் கட்டளையிட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று போதிக்கின்றார். இதை எவ்வாறு செய்வதெனில், அவை நிச்சயமாக நடக்கும் என்ற நம்பிக்கையோடு அவற்றை நாம் கட்டளையிட வேண்டும். உதாரணமாக, பேதுருவைத் தண்ணீரில் நடக்கும்படி இயேசு கட்டளையிட்டுள்ளார். ஆகவே அது நம்மாலும் ஆகக்கூடிய ஒரு செயல். எனவே அது நடக்கும் என்று நம்பி அதைக் கர்த்தரின் பெயரால் நாம் கட்டளையிட வேண்டும் என்பது யொங்கி சோவின் போதனை. பலரது வாழ்க்கையில் இவை நடக்காமல் போவதற்குக் காரணம் அவர்கள் இவற்றில் தெளிவான நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை என்கிறார் யொங்கி சோ. அத்தெளிவான நம்பிக்கையை அடையத்தான் நிகழ வேண்டிய அக் காரியத்தை நாம் மனத்தில் அழுத்தமாகப் படம் பிடித்து அதைக் கர்த்தருக்குப் புலப்படும்படியாகச் செய்ய வெண்டும். ஏனெனில் தமக்குப் புலப்படாத தொன்றை கர்த்தரால் நமக்கு எப்படித் தரமுடியும்? எத்தனை பேருடைய தேவைகளை நினைவுகூர்ந்து அவற்றை அவர் நிறைவேற்ற வேண்டியுள்ளது? என்று யொங்கி சோ வாதிக்கின்றார். என்ன, தலை சுற்றுகிறதா? இதற்கே தலை சுற்றினால் யொங்கி சோவின் ஏனைய போதனைகளை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? வேதத்தின் போதனைகளைத் திரிபுபடுத்தி விளக்கமளித்து வருகிறார் யொங்கி சோ.


**மார்டின் லூதரும், கல்வினும், ஜோன் நொக்ஸும் இன்று நம்மோடில்லாவிட்டாலும் அவர்கள் ஆரம்பித்து வைத்த பணி இன்னும் முடிந்துவிடவில்லை. இன்றைய சூழ்நிலையில் அவர்களைப் போன்ற சீர்திருத்தவாதிகள் அநேகர் தேவை.**

# யார் சீர்திருத்தவாதி?

சீர்திருத்தவாதத்தைப் பற்றிய அறிவு இன்று தமிழ் கிறிஸ்தவ உலகில் அரிதாக உள்ளது. இதற்குப் பல காரணங்களைக் கூறலாம். சீர்திருத்தவாதத்தைப் பின்பற்றி எழுந்த சமயக்குழுக்களும், சபைகளும் இன்று தமிழ்கூறும் நாடுகளில் லிபரல் சபைகளாக மாறியுள்ளன. சீர்திருத்தவாதப் போதனைகளில் அவை நம்பிக்கை இழந்துவிட்டன. சீர்திருத்தவாதம் காலத்திற்குதவாத போதனையாக நிராகரிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் சீர்திருத்தவாதிகளைப் போன்ற போதகர்களும், சபைத் தலைவர்களும் தொடர்ந்து இந்நாடுகளில் தோன்றாததுதான். அனல் கக்கும் வேதப் பிரசங்கங்களும், போதனைகளும், பரிசுத்த வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போதகர்களும் குறைவடையும் போது, சமயக்குழுக்களும், சபைகளும் சீர்த்திருத்தப் பாதையைவிட்டு விலகும் நிலை தோன்ற அதிக காலமெடுக்காது.



சீர்திருத்தக் கோட்பாடுகளைத் தொடர்ந்து சபைகளில் போதிக்கத் தவறியதையும் இந்நிலைமைக்குக் காரணமாகக் குறிப்பிடலாம். விசுவாச அறிக்கைகளையும், வினா விடைப் பயிற்சிகளையும் தூக்கியெறிந்துவிட்டு வேறு வழிகளை சபைகள் நாடிச்சென்றது ஆபத்திற்கு வழிகோலியது. கெரிஸ்மெடிக் இயக்கத்தின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு, மக்களுக்கு உற்சாக மூட்டும் வழிகளை நாடிச் சென்று சபைகள் நமது மூதாதையர்களின் வழிகளைத் துறந்தனர். இதனால் நமது முன்னோர்களின் பாதை நிராகரிக்கப்பட்டது. இன்று சீர்திருத்தவாதிகள் யார்? என்று கேட்கும் நிலைக்குக் காலத்தால் பின்தள்ளப்பட்டு திசையறியாது தள்ளாடிக் கொண்டிருக்கின்றன அநேக சபைகள்.



சமய சமரசம், புதிய சுவிஷேசக் கோட்பாடு, கெரிஸ்மெட்டிக் குழப்பம், சிரிப்பு மாயம், பென்ஸகோலா எழுப்புதல், இனி வரப் போகும் வேறு பல கள்ளப் போதனைகளிலுமிருந்து நம்மையும் நமது சபைகளையும் காத்துக்கொண்டு, சத்தியத்திற்காக உயிரைத்தந்துழைத்த நமது முன்னோர்களான சீர்திருத்தவாதிகளின் பாதையில் முன்னேறும் வழியேது?

இதற்கு ஒரே வழி, சீர்திருத்தவாதம் என்றால் என்ன என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டு நாமெல்லோருமே சீர்திருத்தவாதிகளாக மாறுவதுதான். மார்டின் லூதரும், கல்வினும், ஜோன்

நொக்ஸூம் அபூர்வப்பிரவிகளல்ல. அவர்கள் நம்மைப் போன்ற சாதாரன மனிதர்களே. ஆனால், வரலாறு புகழ்ந்து பேசுமளவுக்கு அவர்களை மாற்றியது எதுவெனில், சத்தியத்திற்காக எதையும் தியாகம் செய்யத்துணிந்த அவர்களுடைய தியாகமனப்பான்மை தான். உண்மையான சீர்திருத்தவாதி தனது நலன்களில் அதிக கவனம் செலுத்தமாட்டான். சத்தியமே அவனுக்கு உயிர்மூச்சு. மார்டின் லூதரை நோக்கி கத்தோலிக்க மதகுருக்கள், "நீ எழுதியவைகள் அனைத்தும் தவறு என்று ஒப்புக் கொண்டால் உனக்கு உயிர்ப்பிச்சை யளிப்போம், நீ நிம்மதியாக வாழலாம்", என்று கூறிய போது, அவர் அதற்குப் பதிலாக, "எனது மனச்சாட்சி வேதத்திற்குக் கட்டுப்பட்டது அதற்கு விரோதமாக என்னால் எதுவும் செய்ய முடியாது" என்று உறுதியாகக் கூறினார். இத்தகைய உறுதி கொண்ட உள்ளமே அவரை உண்மையான சீர்திருத்தவாதியாக மாற்றியது. மேல் படிப்பிற்காக பிரான்ஸூக்குப் போய்க்கொண்டிருந்த ஜோன் கல்வின், ஜெனீவாவில் இருந்தபோது அவர் வந்திருப்பதைக் கேள்விப்பட்ட பெரல், அவரைச் சந்தித்து, "நீர் படித்தது போதும், இந்நாட்டிற்கு உமது உழைப்பு தேவை, சீர்திருத்தவாதம் உம்மை அழைக்கிறது", என்று வலியுறுத்திக் கூறியபோது, பலவீனமான சுபாவமுடையவராகவிருந்த போதும் அவ்வழைப்பைத் தட்டமுடியாத கல்வின் எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு களத்தில் இறங்கினார். இத்தியாக மனப்பான்மை அவரை சீர்திருத்தவாதியாக்கியது. சீர்திருத்தவாதிகளில் எவரை எடுத்துப் பார்த்தாலும் அவர்களது சொந்தத்திறமையோ, படிப்போ அவர்களை சீர்திருத்தவாதிகளாக மாற்றவில்லை, மாறாக கர்த்தரை விசுவாசித்து அவருக்காக எதையும் செய்யத்துணியும் தியாகமே அவர்களை இன்று நாடு போற்றும் மனிதர்களாக மாற்றியுள்ளது.


ஒரு சீர்திருத்தவாதியில் எத்தகைய குணாதிசயங்களைக் காணலாம்.? இன்றைய சூழ்நிலை நாமனைவருமே சீர்திருத்தவாதிகளாக மாறவேண்டும், என்று எதிர் பார்க்குமானால் நம்மில் காணப்பட வேண்டிய இலக்கணங்கள் யாவை?

**1** சீர்திருத்தவாதி கர்த்தருடைய வேதத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவனாக இருப்பான். சீர்திருத்தவாதிகள் அனைவரது வாழ்க்கையிலும் இதனை நாம் பார்க்கலாம். பாரம்பரியங்களுக்கோ, தமது சொந்த அபிப்பிராயங்களுக்கோ மதிப்புக் கொடுக்காமல் கர்த்தருடைய வார்த்தைக்கு மட்டுமே மதிப்பளிப்பவன் சீர்திருத்தவாதி. அதனால்தான் வில்லியம் டின்டேல் கத்தோலிக்க சபை எவ்வளவுதூரம் எதிர்த்தபோதும் வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேயாக வேண்டும் என்று தமது உயிரையும் பணயம் வைத்து அதைச்செய்தார். இதே மனப்பான்மையே மார்டின் லூதரை ஜெர்மானிய மொழியில் வேதத்தை மொழிபெயர்க்க வைத்து, ஐரோப்பா முழுவதுமே அக்கினிக் கொழுந்தாக சீர்திருத்தத்தைப் பரவச் செய்தது.வேதத்திற்குக் கட்டுப்பட்ட ஒரே காரணத்தால்தான் ஸ்கொட்லாந்து அரசியின் கொடுமைகளுக்குப் பயப்படாமல் ஜோன் நொக்ஸ் ஆவேசத்தோடு தொடர்ந்து பிரசங்கித்து ஸ்கொட்லாந்தில் சீர்திருத்தவாதம் ஏற்படக் காரணமாக விருந்தார்.

**2** சீர்திருத்தவாதி சத்தியத்தில் அனுபவ பூர்வமாக வளர்ச்சியடைந்துவரும் மனிதனாக இருப்பான். அதாவது வெறும் அறிவுக்காக மட்டும் வேதத்தைப் படிக்காமல், அதன் மூலம் தன் வாழ்க்கையில் பரிசுத்தம் ஏற்பட வேண்டும் என்று பாடுபடுபவன் சீர்திருத்தவாதி. இன்று கிருபையின் போதனைகளையும், சீர்திருத்தக் கோட்பாடுகளையும் பலர் அறிந்து கொள்ளும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ள அதேவேளை, வெறும் அறிவுக்காக மட்டும் அவற்றைப் படிக்கும் ஆபத்தும் கூடவே ஏற்பட்டுள்ளதை உணர வேண்டும். ஏட்டுப் படிப்பு மட்டும் ஒருவரது வாழ்க்கையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்திவிடாது. எவ்வளவு படிக்கிறோமோ அந்தளவுக்கு தாழ்மையுடன்கூடிய பரிசுத்தம் வாழ்வில் காணப்படவேண்டும். 16, 17 ஆம் நூற்றாண்டு கண்ட சீர்திருத்தவாதிகள் அன்றாடம் கர்த்தருக்குமுன் பரிசுத்த வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே வேதத்தைப் படித்தனர். ஏனெனில் வேதம் மட்டுமே, பரிசுத்த ஆவியின் வல்லமையால், ஒருவர் வாழ்வில் பரிசுத்தத்தை வளர்க்கக்கூடிய ஒரே நூலாக இருக்கிறது. அமெரிக்காவின் பெரும் பிரசங்கியான ஜொனத்தன் எர்ட்வட்ஸ் அன்றாடம் ஒரு நாட்குறிப்பில் தான் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் எழுதி வைத்து அவற்றைத் தவறாது செய்ய சகல நடவடிக்கைகளையும் எடுத்து வந்தார். தாம் படுக்கைக்குப் போகுமுன், கர்த்தருக்குமுன் ஜெபத்தோடு அவற்றை செய்திருக்கிறேனா என்று அன்றாடம் ஆராய்ந்து பார்ப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். எத்தனை பெரிய பிரசங்கியாகவும், மேதையாகவும் இருந்தபோதும் எர்ட்வட்ஸ் அடக்கத்தோடு அனுபவபூர்வமான பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதில் தவறவில்லை.

**3** ஒரு சீர்திருத்தவாதி சத்தியத்தின் அடிப்படையில் மட்டும் சபை அமைப்பையும், சபை வளர்ச்சியையும் நாடும் மனிதனாக இருப்பான். வேதப் போதனைகளில் தெளிவு ஏற்பட்டு, நமது இறையியல் கோட்பாடுகள் வேத அடிப்படையில் சீர்படும்போது அங்கே சீர்திருத்தவாதம் தோன்றுவதைக் காணலாம். ஏனெனில், நமது எல்லா எண்ணங்களையும், நடவடிக்கைகளையும் சீராக்கும் ஒரே நூலாக வேதத்தை நாம் அப்போது பார்க்கத் தொடங்குகிறோம். அத்தோடு நமது தவறான போதனைகளைத் திருத்தி, தெளிவான சத்தியத்தை உறுதியாக நம்பி அதை வெளிப்படையாக அறிக்கையிடும் புது பலத்தையும் வேதம் அளிக்கிறது. அதனால் நமது ஆராதனையும், வழிபாட்டு முறைகளும் வேதத்தின் போதனையின்படி சீரடைகின்றன. பாரம்பரிய சடங்காச்சாரியங்கள் பகலவனைக் கண்ட பனிபோல் மறைந்தோடிவிடுகின்றன. இதுவே லூதரின் வாழ்க்கையில் நிகழ்ந்தது. ஆகவேதான், தொன்னூற்றி ஐந்து கோட்பாடுகளை வேத அடிப்படையில் வரைந்து கத்தோலிக்க சபைக்கெதிராக அவர் போர்க்கொடி எழுப்பினார். அன்றுமுதல், இதுவரையும் மறைத்து வைக்கப்பட்டிருந்த விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல், கிருபையின் மூலம் இரட்சிப்பு, விசுவாசிகளின் ஆசாரித்துவம் போன்ற போதனைகளை மக்கள் மறுபடியும் கேட்கும் வழி ஏற்பட்டது. ஒரு சீர்திருத்தவாதி தன் வாழ்க்கையிலும், சபையிலும் இத்தகைய மாற்றங்கள் வேத பூர்வமாக ஏற்பட அயராது உழைப்பான்.

# வில்லியம் கேரி



**கர்த்தரிட மிருந்து பெருங் காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ் சாதனைகளைச் செய்யுங்கள்**

**கேரியின் குழுவின் கப்பல் பயணம்**

கேரி இங்கிலாந்திலிருந்து "பிரின்ஸஸ் மரியா" என்ற கப்பலில் தன் குடும்பத்தோடும், நண்பர்களோடும் பயணமானார். கப்பல் எங்குமே நிற்காது ஐந்து மாதங்கள் தொடர்ந்து பயணம் செய்து இந்திய நாட்டை இறுதியில் அடைந்தது. போகும் வழியில் எந்தவொரு நாட்டுத் துறைமுகத்திலும் கப்பல் தங்கவில்லை. பல நாடுகளை வழியில் கடந்தபோதும், கடைசி மூன்று மாதங்களில் வழியில் அவர்கள் எந்தக் கப்பலையும் பார்க்கவில்லை. கப்பல் தலைவன், கேரியையும் அவர் உடனிருந்தோரையும் நல்ல முறையில் நடத்தினான். ஞாயிற்றுக் கிழமைகளில் கேரியின் கெபினில் கப்பலில் இருந்தவர்களில் பத்துப் பன்னிரண்டு பேர்வரை ஆராதனைக்குக் கூடினர். கப்பலில் இருந்த ஒருவன் மட்டுமே தனது வெறுப்பைக் காட்டினான். கேரி கப்பலில் இருந்தவர்கள் பாவத்திலிருந்து மனந்திருந்த, அவர்களுக்காக அதிகமாக ஜெபித்தார்.

கேரியின் மனைவியும், பிள்ளைகளும் கப்பல் பயணத்தை சுகமாக அனுபவித்தனர். ஆனால், கேரிக்கு உடல் நலம் கெட்டது. இருந்தபோதும், எதிர்காலத்திற்கான திட்டங்களை இதன் மத்தியிலும் வகுக்க அவர் தவறவில்லை. தனது பிள்ளைகளில் ஒருவனுக்கு சமஸ்கிரதத்தையும், இன்னொருவனுக்கு பார்ஸி மொழியையும் கற்பித்து தனது வழியிலேயே அவர்களும் ஊழியத்திலிறங்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டார் கேரி. கப்பலில் இருந்த நாட்களில், ஜெபத்தில் அதிக நேரத்தை கேரி செலவிட்ட போதும் தனக்கு அடிக்கடி ஏற்படும் சோர்வை எண்ணி வேதனைப்பட்டார். கிடைத்த நேரத்தை எல்லாம் அவரது உடன் ஊழியரான தோமஸிடமிருந்து பெங்காளி மொழியைக் கற்பதில் செலவிட்டார். அதற்குப்பதிலாக அவர் தனது எபிரெய, இலத்தீன், கிரேக்க மொழிப்புலமையைப் பயன்படுத்தி பெங்காளி மொழியில் ஆதியாகமத்தை மொழி பெயர்ப்பதில் தொமஸுக்குத் துணை செய்தார். இதைப்பற்றிப் பின்பு குறிப்பிட்ட தோமஸ், "பொற்கொல்லன் தச்சனுக்கும், தச்சன் பொற்கொல்லனுக்கும் உதவி செய்ததன் மூலம் கர்த்தரின் ஊழியம் தொடர்ந்தது" என்றார்.

**இந்திய மண்ணில் கேரி**


கேரி பயணம் செய்த கப்பல் ஹுக்ளியை நெருங்கியதும், உள்ளூர் மீன் வியாபாரிகளின் படகுகள் கப்பலை நெருங்கின. கல்கத்தாவை நெருங்கிவிட்டதால் அதிகாரிகளிடம் மாட்டிக் கொள்ளக்கூடாது என்பதற்காக கப்பலில் பிரயாணம் செய்வதைத் தவிர்த்து உள்ளூர் படகு ஒன்றில் கேரியின் குழு பயணம் செய்து அருகில் இருந்த ஒரு கிராம சந்தையை அடைந்தது. இங்கேயே முதன் முதல் கேரி இந்தியர்களை சந்தித்தார். பெங்காலி மொழியில் தோமஸ் அவர்கள் மத்தியில் பிரசங்கம் செய்ததையும் பார்த்து ஆனந்தித்தார்.

கல்கத்தாவை அடைந்ததும் தகுந்த ஒரு இடத்தைத் தேடி எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தபின் பக்கத்துக் கிராமங்களுக்குப் போய் கிறிஸ்துவின் செய்தியை எடுத்துச் சொல்வதை கேரியும் தோமஸும் வழக்கமாகக் கொண்டனர். அதேவேளை கேரியின் மனைவியும், மகன் பீலிக்ஸும் வாந்தி பேதி நோயினால் பாதிக்கப்பட்டு, பீலிக்ஸ் மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தான். கேரியின் குழுவில் கணக்கு வழக்குகள் பார்ப்பது தோமஸின் பொறுப்பாக இருந்தது. தோமஸுக்கு அதில் அதிக திறமை இருக்கவில்லை. தங்களுடைய முதல் வருட ஊழியத் தொகையான 150 பவுண்களும் முடியும் நிலையில் உள்ளதாக

தோமஸ் ஒரு நாள் அறிவித்தார். தோமஸ் கணக்குப் பார்த்ததில் ஏற்பட்ட தவறால் வருமானத்திற்கு மேலாக செலவு உயர்ந்து மிஷனரிக்குழுவின் நிலை மிகவும் கஷ்டத்தில் இருந்தது. தொமஸ் இந்தியாவை அடையும்வரை தேவையான அவரது மனைவி, மகளுடைய செலவுத் தொகையும் அதுவரை வந்து சேரவில்லை. இந்நிலையில் தனது வைத்திய ஊழிய த்தை ஆரம்பிப்பதற்கான வேலைகளையும் தொடங்கி அதற்குத் தேவையான ஆட்களையும் வாடகைக்கு அமர்த்தியிருந்தார் தோமஸ். கேரியின் நிலையோ இதனையும்விட மோசமாயிருந்தது. குடும்பத்தில் ஏழு பேரைக் கொண்டிருந்த கேரி, மனைவியும், மகன் பீலிக்ஸூம் வாந்திபேதியில் படும் அவதியையும் கவனிக்க வேண்டியிருந்தது. அவர்கள் குடியிருந்த வீடோ வசதிகளற்ற தோட்டவீடு. அதற்கு மேலாக, கேரி இந்தியமொழி கற்க நியமித்திருந்த பண்டிதருக்கு இருபது ரூபாய் மாத சம்பளம் கொடுக்க வேண்டி யிருந்தது. தோட்டத்திற்கு விதைப்பதற்கு விதைகளும், கருவிகளும் வாங்கவும் பணம் தேவையாயிருந்தது. கடன் வாங்கலாம் என்றாலோ, வட்டி பன்னி ரெண்டு சதவிகிதமாயிருந்தது. பத்துமாதங்கள் இங்கி லாந்திலிருந்து எவ்வித உதவியும் வராத நிலையில் கேரி மிகவும் மனந்தளர்ந்தார். பணத்தேவை அவருக்கு அதிக கவலையையும், வருத்தத்தையும் அளித்தது. அழகிய பெங்கால் நகரின் வனப்புகளின் மத்தியிலும் கேரியைத் தனிமை பிடித்தாட்டியது.

நண்பர்களும், உதவியுமற்ற நிலையில் கேரியின் குடும் பம் வாடியது. கேரியின் மனைவியை வரப் போகும் பதின்மூன்று வருட காலங்கள் பிடித்தாட்டிய மனக் கோளாறும் இதிலிருந்தே ஆரம்பமானது. வாந்தி பேதியால் பாதிக்கப்பட்டு, மூத்த மகன் அதனால் துன்பப்படுவதையும் பார்த்துக் கொண்டு, ரொட்டித் துண்டு வாங்குவதற்கும் வழியில்லாமல், நட்புப் பாராட்டாத ஒரு அந்நிய நகரில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்ட கருணையுள்ள இதயம் கொண்ட கேரியின் மனைவியின் மூளை பாதிக்கப்பட்டது. இத்தகைய நிலைமையில் குடும்பம் நடத்த வேண்டி யிருந்த அவரை யார்தான் குறைகூற முடியும்? அல்லது, இவ்வாரேல்லாம் நடக்கும் எறோ, இத்தகைய நிலையில் வாழ வேண்டிய நிலை ஏற்படு மென்றோ கேரிதான் எதிர்பார்த்திருந்தாரா? இவ்வாறான ஆரம்பகால ஊழியங்களில் ஈடுபட்ட அநேக மிஷனரிமார்களின் மனைவிமார் பெருந் துன்பங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. கேரி யின் மனைவியோ இவற்றில் பெருமளவை வெகு சீக்கிரமே வாழ்வில் அனுபவிக்க வேண்டியிருந்தது.

இறுதியில் கேரியின் குடும்பத்திற்கு சன்டாபார்ன் எனும் இடத்தில் சில ஏக்கர்கள் குடியிருப்புக்காகக் கிடைத்தது. முதல் மூன்று வருடங்களுக்கு எந்தவித வாடகையுமில்லாமல் அதற்கடுத்த வருடங்களில் ஏழாவது வருடம்வரை எட்டு அணாக்கள் வாடகை என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலப்பகுதி கொடிய புலிகளும், நச்சுப் பாம்புகளும் நிறைந்த மோசமான காட்டுப் பகுதியாக இருந்தது. இருந்தபோதும், கிறிஸ்து தனது வாக்குத்தத்தத்தின்படி தனது பிள்ளைகளைக் காப்பார் என்ற நம்பிக்கையில் கேரி இதனை ஏற்றுக் கொண்டார். அத்தோடு



கேரியின் காலத்து ஹூக்லீயும், கல்கத்தாவும்

இந்நிலத்திற்கு எதிர்புறத்தில் இருந்த தேபாட்டா என்ற இடத்தில் இருந்த உப்பு நிறுவனத்தின் பங்களா வில் எவரும் குடியிராதிருந்தால் கேரி அங்கு குடி யேறலாம் என்று நிலச்சொந்தக்காரர்கள் அனுமதி வழங்கினர்.

கேரி மூன்று நாள் படகில் தனது குடும்பத்துடன் பயணம் செய்து தேபாட்டாவை அடைந்தார். நோயால் தொடர்ந்து துன்பப்பட்டுக் கொண்டிருந்த தனது மனைவியையும், மகன் பீலிக்ஸையும் வழியெல் லாம் பராமரிக்க வேண்டியிருந்தது. ராம் ராம் பாசு என்ற மனிதன் இவர்களுக்கு வழித்துணையாக இருந்தான். எவருமே நூறு மீட்டர் தூரம்வரை காட்டுப் புலிகளுக்குப் பயந்து போக மறுக்கும் ஓர் இரவில் கேரி இப்பயணத்தை மேற்கொண்டிருந்தார். நான்காவது நாள் காலையில் தேபாட்டாவை அடைந்தபோது பங்களாவில் வேறுயாரோ குடியிருப் பது தெரியவந்தது.

உப்புக் கம்பனியின் உதவியாளரான சார்ள்ஸ் ஸ்கொட் அன்று உதவியிருக்காவிட்டால் கேரியின் நிலைமை மோசமாகப் போயிருக்கும். கேரியின் குடும்பத்தின் வருகையை அறிந்து வியந்து, விரைந்து வந்த ஸ்கொட் அவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்தார். அவர்களுக்கு காலை உணவளித்த பின் தன்னோடு தங்கும்படியாகவும், தன்னால் முடிந்த எல்லா உதவிகளையும் அளிப்பதாகவும் ஸ்கொட் அவர்களை வற்புறுத்தினார். அதற்குப்பின் வந்த அநேக மாதங்களில் கேரியின் குடும்பத்தின் எல்லாத் தேவைகளையும் அன்போடு நிறைவேற்றி வைத்தார் ஸ்கொட்.

திருமணமாகாமல் வாழ்ந்து வந்த ஆங்கிலேயரான ஸ்கொட் ஒரு கிறிஸ்தவரல்ல. இருந்தபோதும், ஒரு நல்ல சமாரியனாக தன்னைத் தேடி வந்தவர்களை எப்போதும் உபசரிக்கவும், உதவி செய்யவும் தவற வில்லை. பிறரில் அன்பு செலுத்துவதை வாழக்கை யில் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வந்தார் ஸ்கொட். ஆனால் அவர் செய்த நல்ல காரியங்களுக் குப் பலன் கிடைக்காமல் போய்விடவில்லை. அந்த நல்ல மனிதனின் வாழ்வில் அந்த பெப்ரவரி மாதம் ஆறாம் திகதி வசந்தத்தின் உதயமாக இருந்தது.

(இன்னும் வளரும்)

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

***கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே திருமறைக்கல்வி என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவ கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்டின் லூதர், ஜோன் கல்வின் போன்றோர் இதன் அவசியத்தைப் பெரிதும் உணர்ந்திருந்தனர். சார்ள்ஸ் ஸ்பர்ஜன் 1889 இல் தன் சபை மக்களின் நன்மை கருதி இத்தகைய திருமறைக் கல்வி நூலை வெளியிட்டார். இதனையே இங்கு விளக்கக் குறிப்புகளுடன் வழங்குகிறோம்.***

*கேள்வி 30: கிறிஸ்துவால் விலை கொடுத்துப் பெறப்பட்ட மீட்பில் நாம் எவ்வாறு பங்கு கொள்ளும்படிச் செய்யப்பட்டோம்?*

*பதில்: கிறிஸ்துவால் விலை கொடுத்துப் பெறப்பட்ட மீட்பினை பரிசுத்த ஆவி நம்மில் திட்ப உறுதியாக செயல்படுத்தியதன் மூலம் நாம் அதில் பங்கு கொள்ளும் தகுதி பெற்றோம்.*

*(யோவான் 1:12; தீத்து 3:5-6)*

கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் ஒரே மீட்பர் கிறிஸ்துவே. ஏனெனில், அவர் நமது மீட்பைப் பெற்றுத் தந்ததோடு, பரிசுத்த ஆவியின் மூலம் அதை நம்மில் செயற்படுத்துபவராகவும் உள்ளார். இதனால் பரிசுத்த ஆவியை நாம் வெறும் சக்தியாகக் கருதிவிடக்கூடாது. அவர் ஒரு நபர். பரிசுத்த ஆவி, மகிமையிலும் வல்லமையிலும் பிதாவுக்கும், குமாரனுக்கும் சமமானவராக உள்ளார். நமது இரட்சிப்பு, கடவுளாகிய பிதா, குமாரன், ஆவி ஆகிய மூவரின் பெரும் வல்லமையினாலும், கிருபையினாலும் பெற்றுத் தரப்பட்டுள்ளது. ஆகவே, நாம் அதைக் கிறிஸ்துவால் மட்டும் பெற்றுத் தரப்பட்டதாகக் கருதிவிடக்கூடாது. இரட்சிப்பு பற்றிய வேத சத்தியத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளுவதற்கு திரியேகத் தேவனைப் பற்றிய முழுமையான அறிவு நமக்கு அவசியம். கடவுளாகிய பிதா தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் மீட்பிற்காகத் தனது குமாரனைத் தந்தார். குமாரனாகிய கிறிஸ்து தனது கீழ்ப்படிதலின் மூலம் மீட்பை விலை கொடுத்துப் பெற்றார். பரிசுத்த ஆவி தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் மீட்பைச் செயல்படுத்துகிறவராயிருக்கிறார். இதற்கு மாறான போதனைகளை கிறிஸ்தவ போதனைகளாக நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

புதுமைவாதம் சபை வரலாற்றில் எப்போதும் பல பெயர்களுடன் உலவி வந்துள்ளது. ஆனால், அது எத்தனை பெயர்களில் உலவி வந்திருந்த போதும் இரட்சிப்பைக் குறித்த அதன் போதனை ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. அதாவது, இதில் எந்த விதமான அற்புதமோ, தெய்வீகமோ இல்லை; நற்செய்தியில் நாம் ஒரு சாதாரன நல்ல மனிதனான இயேசு நமக்கு ஒரு உதாரணமாக வாழ்ந்து காட்டியதை மட்டுமே பார்க்கிறோம், என்று புதுமைவாதம் போதிக்கின்றது. மனிதனை இரட்சிக்கும் வல்லமையானது அவனிலேயே தங்கியிருக்கின்றது, எனவே மனிதனே அவனது சொந்த இரட்சகன் என்பது இதன் போதனை.

இன்னுமொரு போதனை ஆர்மீனியனிஸமாகும். அதைப்பற்றி விபரமாக இப்பத்திரிகையின் வேறுசில தொடர் கட்டுரைகளில் நீங்கள் வாசிக்கலாம். சுருக்கமாகக் கூறப்போனால் இப்போதனை, இரட்சிப்பிற்காக மனிதன் கடவுளில் பாதியும், தன்னில் பாதியுமாக தங்கி நிற்கிறான் என்று கூறுகின்றது. இது வேதத்தின் திரித்துவப் போதனையை நியாயப்படுத்துவதாக இல்லை. இது பலவிதங்களில் ரோமன் கத்தோலிக்கப் போதனையை ஒத்து நிற்கின்றது. ஏனெனில், ரோமன் கத்தோலிக்கப் போதனையும் மனிதனின் உதவியில்லாமல் கடவுளால் மனிதனை இரட்சிக்க முடியாது என்றே போதிக்கின்றது. அதாவது, விசுவாசம் மட்டுமல்லாமல் மனிதனின் கிரியையும், கிறிஸ்து மட்டுமல்லாமல் மேரியின் துணையும், இரட்சிப்பிற்கு அவசியம் என்பது ரோமன் கத்தோலிக்கப் போதனை.

சீர்திருத்தக் கோட்பாடு (கல்வினிஸம்) மட்டுமே தெய்வீகத்தன்மையுடைய இரட்சிப்பின் போதனையை அளிக்கிறது. இதற்கும், ஆரம்ப காலங்களில் வரலாற்றில் வேறு பெயர்கள் இருந்துள்ளன. சபை வரலாற்றில் ஆகஸ்தின் என்பவர் இதனைப் போதித்துள்ளதால் இதற்கு ஆகஸ்தீனியனிஸம் என்ற பெயர் இருந்தது. பதினாறாம் நூற்றாண்டு

சீர்திருத்த காலப் பகுதியில் இப் போதனை மறுபடியும் மார்டின் லூதர், கல்வின், சுவிங்லி, ஜோன் நொக்ஸ் போன்றோரால் அறியப்பட்டு போதிக்கப்பட் டது. இன்று இது கல்வினிஸம் என்று அழைக்கப்படுகின்றது. அதற்குக் காரணம், கல்வின் இப் போதனைக்குத் தெளி வான முழுவடிவம் தந்ததுதான். ஆனால், இப்போதனைதான் நமக்கு முக்கியமே தவிர, இதைப் போதித்த மனிதனோ, அவரது பெயரோ அல்ல. இப்போதனை, பாவியாகிய மனி தன் தனது இரட்சிப்பிற்கு முழுமையாகக் கடவுளில் தங்கி யுள்ளான் என்று போதிக்கின்றது.

இனி வரும் இதழ்களில், பரிசுத்த ஆவி, தெரிந்து கொண்ட வர்களில் மீட்பைச் செயல்படுத்தும் படிமுறையைப்பற்றி விளக் கும் சில கேள்விகளைப் பார்க்கப் போகிறோம். அதற்குமுன் இவை யாவை என்பதை நாம் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். படிமுறை என்று கூறியவுடன் இரட்சிப்பு நம்மில் படிமுறையாக கால இடைவெளியில் நிகழும் ஒன்று என்று எண்ணிவிடக் கூடாது. இவற்றில் சில ஒரே நேரத்தில் ஒரு சேர நிகழ்பவை. இப் படிமுறைகள் யாவை?

**1.** திட்ப உறுதியான அழைப்பு

அ. அழைப்பு – நற்செய்தி மூலம் கொடுக்கப்படுவது.
ஆ. மறுபிறப்பு – பரிசுத்த ஆவி ஒருவரைப் புதிய மனிதனாக மாற்றும்போதே அம்மனிதர் நற்செய்தியை இரட்சிக்கப்படும் விதத்தில் கேட்டுப் பலனடைய முடியும்.

**2.** மனந்திரும்புதல் – பாவியாகிய ஒருவர் கிறிஸ்துவிடம் திரும்புதல்

அ. மனமாற்றம் – ஒருவர் முழுமையாக பாவத்திலிருந்து திரும்புதல்.
ஆ. விசுவாசம் – ஒருவர் முழுமையாக கிறிஸ்துவிடம் திரும்புதல்.

**3.** நீதிமானாக்குதல் – பாவியாகிய ஒருவர் கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, அவர் உடனடியாக நீதிமானாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார்.

**4.** மகவேட்பு – பாவியாகிய ஒருவர் கிறிஸ்துவை விசுவாசி த்து, நீதிமானாகும்போது, அவர் கடவுளின் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்.

**5.** பரிசுத்தமாக்குதல் – ஒருவர் மனந்திரும்பிய நாளில் இருந்து மரிக்கும்வரை பாவத்தோடு போராடவும், பரிசுத்தமாகவும் பரிசுத்த ஆவி அவரில் செயல்படுகிறார்.

**6.** மகிமையடைதல் – கிறிஸ்து மறுபடியும் வரப்போகும் கடைசி நாளில், விசுவாசிகள் தமது சரீரத்திலும், ஆவியிலும் பூரணமாக்கப்படுவார்கள்.

ஆர்மீனியக் கோட்பாடு மேற்குறிப்பிட்டவற்றை ஒப்புக்கொள் வது போல் தோற்றமளித்தாலும் இவையனைத்தும் தன்னில் நிகழக் கூடிய வல்லமையை மனிதன் கொண்டிருக்கிறான் என்று போதிக்கின்றது. பரிசுத்த ஆவியின் செயற்பாட்டிற்கும் அது முக்கியத்துவம் கொடுக்கத் தவறுகிறது. ஆனால் சீர்திருத்தக் கோட்பாடு இவை மனிதனில் நிகழ கடவுளே மூல காரணமாக இருக்கிறார் என்று போதிக்கின்றது.

# நமது அன்றாட அப்பம்

*வேதத்தை எவ்வாறு படிப்பது என்று பியூரிட்டன்களில் ஒருவரான தொமஸ் பொஸ்டன் தரும் சில பயனுள்ள அறிவுறைகள்.*

*1. வேதம் முழுவதையும் படிப்பதற்கு துணை புரியக்கூடிய தொடர்ச்சியான ஒரு முறையைப் பயன்படுத்த வேண்டும். எப்பகுதியையும் விட்டு விடக்கூடாது. அரைகுறையாக அதைப் படிக்க முயலக்கூடாது. கடினமானவை என்று கருதி எப்பகுதியையும் தவிர்க்கக் கூடாது. முழு வேதமும் கடவுளின் வார்த்தை என்பதை நினைவிலிருத்திப் படிக்க வேண்டும்.*

*2. நமக்கு மிகவும் பயனுள்ளதாகவிருந்த பகுதி களை அடையாளமிட்டு வைக்க வேண்டும். இதனால் அடிக்கடி இப்பகுதிகளை நாம் மறுபடியும் வாசித்துப் பயனடைய முடியும்.*

*3. வேதத்தை வேதத்தோடு ஒப்பிட வேண்டும். நமக்குத் தெளிவில்லாத பகுதிகளை வேதத்தின் தெளிவான பகுதிகளைப் பயன்படுத்திப் புரிந்து கொள்ள வேண்டும், 2 பேதுரு 1:20.*

*4. கடவுளின் மகிமையைக் கருத்தில் கொண்டு, பரிசுத்தமான உயர்ந்த நோக்கத்தோடும், மரியாதையுடனும் வேதத்தை அனுக வேண்டும். வேதத்தை வாசிக்கும்போது முதலில் அதன் வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும், இரண்டாவது, அதன் பொருளை அறிய முற்பட வேண்டும். மூன்றாவது, அதன் அதிகாரத்தையும், வேதத்தை நமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நமது தவிர்க்க முடியாத கடமை யையும் கருத்தில் கொண்டு படிக்க வேண்டும், 1 தெசலோ. 2:13.*


*5. வேதத்தை வாசிக்கும் போது நமது பிரதான நோக்கம் அதைக் கடைப்பிடிப்பதாக இருக்க வேண்டும், யாக்கோபு 1:22. அதை வாசிக்கும் போது, எந்தவிதமான கட்டுப்பாடும் விதிக்காம லும், எதையும் தவிர்க்காமலும், கடவுள் நம்மி டம் எதிர்பார்க்கும் அனைத்தையும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத் தோடு படித்துப் பயனடைய வேண்டும்.*

*"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்;" (யோவான் 5:39).*

ஜே. ஐ. பெக்கர், ஜோன் ஓவனின் நூலுக்கு வழங்கிய முன்னுரை.

# கிருபையின் கோட்பாடுகள்

- ஓர் அறிமுகம் -



***இது ஜோன் ஓவனின் காலத்தால் அழியாத 'மரணத்தினால் உண்டாகும் வாழ்வு' நூலுக்கு வழங்கப்பட்ட முன்னுரை. வேதம் போதிக்கும் கிருபையின் போதனைகளுக்கு இது மிகவும் அருமையான அறிமுகம். வாசகர்கள் வாசித்து சிந்தித்துப் பயனடைய வேண்டிய தொடரிது.***

கல்வினிஸ - ஆர்மீனிய கோட்பாடுகள் இரண்டையும்பற்றிய விளக்கங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது அவற்றைப் புரிந்து கொள்ள உதவும்.

*(1).* தகுதிபெற்ற, ஒரு குறிப்பிட்ட மக்களை, அதாவது கிறிஸ்துவை விசுவாசித்த வர்களை, புத்திர சுவீகாரத்திற்கும், மகிமைக்கும் ஏற்றுக் கொள்ளும்படியான தேவனுடைய தீர்மானமே, தேவனுடைய தெரிந்தெடுப்பு என்று ஆர்மீனியக் கோட்பாடு விளக்குகின்றது. தனிப்பட்ட மனிதர்கள் சுயமாகவே கிறிஸ்துவை விசுவாசிப்பார்கள் என்பதை தேவன் முன்கூட்டியே பார்த்து அறிந்திருப்பதால் இத்தகைய தீர்மானத்தை எடுத்தார் என அது போதிக்கின்றது. கடவுள், எந்த வொரு மனிதனையும் விசுவாசிக்க வைக்க வேண்டும் என்று ஒருபோதுமே முயற்சி செய்யவில்லை என்றும், தெரிந்தெடுத்தலாகிய தேவனுடைய ஆணை யில் மேற்குறிப்பிட்ட மக்களுடன் வேறு அங்கத்தவர்களும் இருக்கிறார்கள் என்று கூறுவதற்கான எந்தவித ஆதாரமும் இல்லை என்றும் ஆர்மீனியனிஸம் போதிக்கிறது.

ஆனால் கல்வினிஸமோ தேவனுடைய தெரிந்தெடுப்பாவது, கிறிஸ்துவின் மரணத்தால் மீட்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் திட்ப உறுதியுடைய அழைப் பினால் விசுவாசம் வழங்கப்பட்டு, பாவத்திலிருந்து மீட்கப்பட்டு, மகிமைக்குக் கொண்டுவரப்பட்ட, எவ்வித தகுதியுமற்ற குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் தெரிந்தெடுப்பே என்று விளக்குகின்றது. ஆர்மீனியன், "நான் விசுவாசித்த தனால் தெரிந்து கொள்ளப்பட்டேன்" என்று கூற, கல்வின் கொள்கை யாளனோ, "நான் தெரிந்து கொள்ளப்பட்டதால் விசுவாசிக்க முடிந்தது" என்று கூறுகிறான். தெரிந்தெடுப்பு பற்றிய இவ்விரு கருத்துக்களும் முற்றிலும் வேறுபாடானவை.

*(2).* இயேசு கிறிஸ்துவின் மீட்பின் பணியை விளக்கும் ஆர்மீனியன், பாவிகள் விசுவாசித்தால் அவர்களுக்குப் பாவமன்னிப்பளிப்பது என்ற நிபந்தனையின் அடிப்படையில் அவர்களை விடுவிக்க கடவுள் சித்தங் கொண்டிருந்தபோது அதற்குக் குறுக்கீடாக அமைந்திருந்த தடைகளை (நீதியின் திருப்தி செய்யப் படாத கோரிக்கைகள்) நீக்குவதற்கான பணியே கிறிஸ்துவின் மீட்புப் பணி என்று கூறுகிறான். ஆர்மீனியனிஸத்தின் கருத்துப்படி, மீட்புப்பணியானது, இந்தத் தகுதியை மக்களுக்கு வழங்குவதற்கான அதிகாரத்தைக் கடவுளுக்குப் பெற்றுத் தந்ததேயல்லாமல், பாவிகள் எவரும் எக்காலத்திலும் இதனை ஏற்றுக் கொள்வார்கள் என்பதை உறுதிப்படுத்தவில்லை. ஏனெனில், விசுவாசமானது மனிதனுடைய சொந்தச் செய்கையாகையால், கல்வாரியில் இருந்து வரக்கூடிய தேவனுடைய ஈவு அல்ல என்பது அதன் முடிவு. கிறிஸ்துவின் மரணம், விசுவாசத்தை அப்பியாசிக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தந்ததைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை என்பது அதன் போதனை.

ஆனால், கல்வினிஸமோ கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றி விளக்கும்போது, கிறிஸ்து, குறிப்பிட்ட பாவிகளின் பாவத்தின் தண்டனையைத் தன்மேல் தாங்கி, அவர்களுடைய ஸ்தானத்தில் பதிலீடாக மரித்ததன் மூலமாக தேவன் அவர்களோடு ஒப்புரவாகியதால், அவர்களுடைய கடன்களெல்லாம் என் றென்றைக்குமாக அழிக்கப்பட்டு, அவர்களை நித்திய ஜீவனுக்கென்று நாமந் தரிக்கப்பட்டவர்களாக்கியது என்று போதிக்கின்றது. இதன் விளைவாக,

*பாவிகள் விசுவாசத்தை ஈவாகப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை தேவனுடைய பார்வையிலே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த விசுவாசம் அவர்கள் தங்கள் சுதந்திரத்தை அனுபவிக்க உட்பிரவேசிக்கக் கூடிய ஒரு வழியாக அமைந்துள்ளது. இன்னுமொரு வகையில் கூறப்போனால், கல்வாரி மரணமானது, கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களுடைய இரட்சிப்பை வெறுமனே சாத்தியமாகக்கூடியதொன்றாக ஆக்கவில்லை, மாறாக அவர்கள் விசுவாசத்திற்குக் கொண்டுவரப்பட்டு நிச்சயம் இரட்சிப்பை அடைவார்கள் என்பதை உறுதிப்படுத்தியது.*

*சிலுவையோ இரட்சிக்கிறது. ஆனால் ஆர்மீனியனோ, "கல்வாரியின் துணையில்லாமல் நான் என்னுடைய இரட்சிப்பை அடைந்திருக்க முடியாது" என்று மட்டுமே கூறத்துணிகிறான். கல்வின் கொள்கையாளனோ, "கிறிஸ்து, எனது இரட்சிப்பை எனக்காகக் கல்வாரியில் சம்பாதித்தார்" என்று கூறுகிறான். ஆர்மீனியர்கள் சிலுவையை ஒரு இன்றியமையாத தகுதிக் கூறாகக் கருதுகின்றனர். கல்வின் கொள்கையாளரோ, இரட்சிப்பைப் பெற்றுத் தருவதற்கான உண்மையான காரணியாக சிலுவையைப் பார்க்கிறார்கள். அத்தோடு, கல்வாரியிலே பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையில் நடைபெற்ற செயற்பாட்டின் மூலம் பெறப்பட்ட விசுவாசம் உட்பட அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் ஊற்றுக்கண்ணாகவும் சிலுவையை அடையாளம் காண்கின்றனர். ஆகவே, இரட்சிப்பைப் பற்றிய இவ்விரு கருத்துக்களும் தெளிவாக வேறுபட்டுக் காணப்படுகின்றன.*

*(3). பரிசுத்த ஆவியால் கொடுக்கப்படும் உள்ளான கிருபையை, அதாவது, நன்மை தீமை அறிந்து இயங்கும் பண்பை ஆர்மீனியர்கள், தேவனுடைய சத்தியத்தைப் புரிந்து கொள்ளுவதற்குத் துணைபுரியும் வெறும் அறிவாக மட்டுமே கருதுகிறார்கள். தேவனை எவரும் விசுவாசிப்பதற்கு இது தன்னில் எதையுமே கொண்டிருக்கவில்லை என்று உறுதியாகக் கூறுகிறார்கள். ஆனால், கல்வின் கொள்கையாளரோ, இவ்வுள்ளான கிருபையை வெறும் அறிவைத் தரும் சாதனமாக மட்டும் கருதாமல், மனிதரில் மறுபிறப்பை ஏற்படுத்தும் கடவுளின் செயலாகக் கருதுகிறார்கள். கிருபையானது, மனிதர்களுடைய கல்லான இருதயத்தை அகற்றி சதையான இருதயத்தைத் தந்து, அவர்களுடைய சித்தத்தைப் புதுப்பித்து, கடவுளின் சர்வ வல்லமையால் நன்மை செய்வதில் உறுதி பூண்ட மனத்தைத் தந்து, அவர்களைக் கிறிஸ்துவிடம் திட்ப உறுதியுடன் கொண்டு வரும் கடவுளின் செயலாகும். அதேநேரம், அவ்வாறு வருபவர்கள் கிருபையினால் கிறிஸ்துவிடம் வரும்படியான இதயத்தைப் பெற்றுத் தாங்களாகவே அவரிடம் வருகிறார்கள் (இதை வெஸ்ட்மின்ஸ்டர், 1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கைகள் மிகத் தெளிவாக விளக்குகின்றன). கிருபை, மனிதனின் நிராகரிக்கும் மனநிலையை அகற்றுவதால், தான் நிராகரிக்க முடியாததொன்று என்பதை நிரூபிக்கின்றது. எனவே, ஆர்மீனியன், "நான் கிறிஸ்துவுக்காகத் தீர்மானம் எடுத்தேன்" என்றும், "நான் கிறிஸ்தவனாக மாறுவதற்குத் தீர்மானம் எடுத்திருக்கிறேன்" என்றும் பெருமையுடன்*

## கல்வினிஸத்தைப் பற்றி ஸ்பர்ஜன்.....!

**வேதத்தில் கல்வினிஸத்தைத் தவிர வேறு எந்தப் போதனையையும் நான் பார்க்கவில்லை. அதுவே வேதத்தின் சாராம்சம். "அவரே எனது கன்மலையும் இரட்சிப்புமாயிருக்கிறார்". இதற்கு மாறான எதையும் நீங்கள் என்னிடம் கூறுவீர்களானால் அது போலித்தனமானதே. போலிப்போதனையொன்றை என்னிடம் காட்டுங்கள்; அது எவ்வாறு கிறிஸ்து என் கன்மலையும் இரட்சிப்புமாயிருக்கிறார் என்ற, இந்தப் பெரும் அத்திவாரமாகிய வேத சத்தியத்திலிருந்து விலகி நிற்கிறது என்பதை நான் கண்டு கொள்வேன். ரோமன் கத்தோலிக்க மதத்தின் போலிப்போதனை எது? கிறிஸ்துவின் பூரணமான மீட்புப்பணியோடு வேறெதையும் சேர்ப்பதேயாகும். அதாவது, நம்மை நீதிமான்களாக்குவதற்கு சரீரத்தின் முயற்சிகளை நாடுவதே. ஆர்மீனியனிஸத்தின் போலிப்போதனை எது? நமது மீட்பரின் பணியோடு வேறெதையும் சேர்ப்பதே. எந்தவொரு போலிப் போதனையையும் ஆராயும் போது இந்த இடத்திலேயே அது தன்னைப் பூரணமாக வெளிப்படுத்தி விடுவதைப் பார்க்கலாம்.**



## முக்கிய அறிவித்தல்

**பத்திரிகை மற்றும் நூல்கள் தேவையான வாசகர்கள், உங்கள் கடிதங்களை நியூசிலாந்து முகவரிக்கே அனுப்புங்கள். மேலதிகப்பிரதிகளும், நூல்களும் இங்கிருந்தே அனுப்பப்படுகின்றன. இதுவரை பத்திரிகையை நண்பர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டவர்கள் தொடர்ந்து கிடைக்காதிருந்தால், எமக்குத் தெளிவான முகவரியுடன் எழுதினால் பத்திரிக்கையை அனுப்பி வைப்போம்.**

கூறுவதில் திருப்தி அடையும்போது கல்வின் கொள்கையாளனோ, தனது மனந்திரும்புதலாகிய அனுபவத்தைக் கீழ்வருமாறு இறையியல் பாணியில் பேச விரும்புகிறான்.

“பாவக்கட்டால் காரிருளில் - என்
ஆவிகிடந்த அந்நாளில்:
உயிர்ப்பிக்கும் ஒளிக்கற்றை
உம் கண்ணினின்று ஒளிவீச;
இருட்டறையில் ஒளிபரவி
உயிர் பெற்றேன் இப்பாவி;
இரும்புச் சங்கிலி முறிந்தது
இருதயம் விடுதலை அடைந்தது;
எழுந்தேனே முன் நடந்தேனே
உம்மைப் பின்பற்றி நானே.”

எனவே, உள்ளான கிருபை பற்றிய இவ்விரு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று எதிரானவை என்பது தெளிவு.

இந்நிலையில் கல்வின் கொள்கையாளர்கள், தெரிந்தெடுப்பு, மீட்பு, அழைப்பு ஆகிய தேவனுடைய செயல்கள் ஒருவரை இரட்சிப்பதில்லை என்ற ஆர்மீனியர்களின் கொள்கை, இவை பற்றிய வேத விளக்கங்களையே தகர்த்தெறிவதாகவுள்ளது என்று வாதிடுகின்றனர். அதாவது ஆர்மீனியர்கள், கடவுள் விசுவாசிகளைத் தெரிந்து கொள்கிறார், கிறிஸ்து எல்லோருக்குமாக மரித்தார், பரிசுத்த ஆவியானவர், எவரெல்லாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களை உயிர்ப்பிக்கிறார் என்று போதிப்பது உண்மையில் வேத அடிப்படையில் தேவன் எவரையுமே தெரிந்து கொள்ளாதது போலவும், கிறிஸ்து எவருக்காகவும் மரிக்காதது போலவும், ஆவியானவர் எவரையும் உயிர்ப்பிப்பதில்லை என்பது போலவும் பொருள்படுகின்றது! இரட்சிப்பின் கோட்பாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்த வேதப்பதங்களான தேவனின் அன்பு, கிருபையின் உடன்படிக்கை, அத்தோடு வினைச் சொல்லான “இரட்சிப்பு” மற்றும் அதனையொத்த ஏனைய வார்த்தைகளை எவ்வாறு அர்த்தப்படுத்துவது என்பதில்தான் இந்தச் சர்ச்சை அடங்கியுள்ளது. ஆர்மீனியர்கள், இரட்சிப்பு தேவனுடைய எந்த ஆணையிலோ செய்கையிலோ தங்கியிராமல், விசுவாசித்தலாகிய மனிதனுடைய சுயாதீனமான செய்கையிலேயே தங்கியுள்ளது என்று கூறி உண்மையைப் பூசி மறைக்கின்றார்கள். கல்வின் கொள்கையாளரோ, ஆர்மீனியர்களின் இக்கொள்கை வேதத்திற்கு ஒவ்வாததும், சமயநெறிகளுக்கு முரண்பட்டது மானது என்று மெய்ப்பித்து நிலைநிறுத்துவதோடு, இது வேதத்தைத் திரிபுபடுத்தி, சுவிஷேசத்தின் ஒவ்வொரு பகுதியையும் அழிக்க முனைகிறது என்று சாதிக்கிறார்கள். இதுவே உண்மையில் ஆர்மீனிய சச்சரவு.

(வளரும்)

# சத்தியம்

**சத்தியத்தின் காதுகளில் கலப்படமான முத்துக்களை அலங்காரமாக அணிவிப்பதைவிட அதை எவ்வித கலப்படமுமில்லாமல் சுத்தமாகப் போதிப்பது மேலானது.**
**- தொமஸ் புரூக்ஸ்**

**சத்தியம் நோய்வாய்ப்பட்டிருப்பதாக நமக்கு செய்தி வரலாம், ஆனால் அது இறந்துவிட்டதாக ஒருபோதும் செய்தி வராது.**
**- வில்லியம் கர்னல்**

**சத்தியம் ஒன்றே, ஆனால் சத்தியத்தைப் பற்றிய போலிப் போதனைகள் அநேகம்.**
**- தொமஸ் குட்வின்**

**ஒரு தவறே இன்னொன்றிற்குப் பாலமாக அமைகின்றது.**
**- வில்லியம் ஜென்கின்**

***இன்று நம்மைச் சுற்றி எங்கு பார்த்தாலும் உலக ஆசையும், பண ஆசையும், சரீர இச்சையும் உடையவர்களாய் ஓய்வு நாளையும் புறக்கணிக்கிற அநேகரைப் பார்க்கிறோம். அதே வேளை இவர்கள் கிறிஸ்துவை தாங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளதால் தாங்கள் நல்ல நிலைமையில் இருப்பதாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய நோக்கம், அன்றாட சம்பாஷனை, ஓய்வு கால நடவடிக்கைகள் என்பவற்றைப் பார்க்கும்போது கடவுளை விசுவாசிக்காதவர்களுக்கும் இவர்களுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. இவர்களுடைய குடும்ப வாழ்க்கையிலோ, சமூக உறவிலோ போலித்தனத்தைத் தவிர, மற்றவர்களிடமிருந்து இவர்களை வேறுபடுத்திக் காட்டும் வேறு எதுவுமே கிடையாது. இவர்களுக்கு தேவ பயமென்பதே இல்லை. கடவுளுடைய கட்டளைகளின் அதிகாரத்திற்கும் இவர்கள் கட்டுப்படுவதில்லை. கடவுளின் பரிசுத்தமும் இவர்களைக் கவருவதில்லை.***
***- ஏ. டபிள்யு. பிங்க்***

# பென்ஸகோலாவில் "டொரான்டோ சிரிப்பலை மாயம்"


டொரான்டொ விமான நிலைய சபையில் ஏற்பட்டதாகக் கூறிப் பரவத்தொடங்கிய சிரிப்பலை மாயத்தைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டுள்ளோம். இப்போது அமெரிக்காவில், புளோரிடா என்ற பிரதேசத்தில் உள்ள பென்ஸகோலா நகரின் பிரவுன்ஸ்வில் அசெம்பிளி என்ற சபையில் இது பரவியிருப்பதாக செய்திகள் வருகின்றன. இதுவரை ஒரு மில்லியனுக்கு மேலானோர் இதைப்பார்ப்பதற்காக இந்நகருக்கு விஜயம் செய்துள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

பிரவுன்ஸ்வில் சபையில் இது ஏற்படக் காரணமானோர் இச்சபைப் போதகரான கில் பெட்ரிக்கும், தென் ஆபிரிக்க பென்டிகோஸ்டல் சுவிஷேசகரான ஸ்டீவன் ஹில்லுமே.

இவ்வெழுப்புதல், டொரான்டோ விமான நிலைய சபை எழுப்புதலையும் மீறிவிட்டதாகவும், சொல்லப்போனால் அப்போஸ்தலர் நடபடிகளில் காணப்படும் எழுப்புதல் களையெல்லாம்விடப் பெரியதும், மேலானதுமானது என்று கில் பெட்ரிக் அறிவித்துள்ளார். இவ்வெழுப்பு தல் இன்னும் ஆழமாகப் பரவி வானத்து முகில்களைக் கிழித்துக் கொண்டு இயேசு தோன்றப் போகிறார் என்று கில் பெட்ரிக் தனது சபையில் போதித்துள்ளார். இப்புதிய எழுப்புதலைப் பற்றி, கொரியாவின் போல் யொங்கி சோ 1991 தீர்க்கதரிசனம் கொடுத்ததாகவும் அதன் விளைவே இவ்வெழுப்புதல் என்றும் கூறப்படு கிறது.

### பென்ஸகோலா எழுப்புதலின் இரு முக்கிய அம்சங்கள்

1. ஆவியால் தள்ளப்படுதல். இது பரிசுத்த ஆவியினால் ஏற்படும் ஒரு அனுபவமல்ல. இவ்வனுபவத்தால் மனிதர்கள், உடல் நடுக்கம் கண்டு, தம்மை மறந்து நிலத்தில் விழுந்து உருண்டு புரளும் நிலையை அடைகிறார்கள். ஸ்டீபன் ஹில் மேடையில் ஏறியதுமே மக்கள் பெருங்கூக்குரலிட்டுக் கதறி நிலத்தில் விழுந்து



புரளுகிறார்கள். இவ்வாறு விழு பவர்களை எப்படிப் பிடிப்பது என்பதற்கான விளக்கங்களும் பிரவுன்ஸ்வில்லில் கொடுக்கப்படு கின்றது. பென்ஸகோலா ஒரு விதத்தில் டொரான்டோவையும் தாண்டிவிட்டது. ஹில், இத் தகைய மின்சார அனுபவம் தன்னை நிலத்தில் இருந்து நாலடி உயரத்திற்குத் தூக்கி நிறுத்திய தாகக் கூறுகிறார். அத்தோடு, இவ் வனுபவம் ஒருவரை நூறு அடி தூரத்திற்கு அப்பால் உள்ள ஒரு சுவரில் தூக்கி எறிந்து, பின்பு அவரை தலையில் வெறும் வீக்கத்தோடு மட்டும் எழுந்து நடக்கச் செய்யும் என்று கூறுகிறார். இத்தகைய அனுபவங்கள், வேத அனுபவங் களுக்கு அப்பாற்பட்டதொரு அனுபவத்தை நாடும் மனித முயற்சியின் விளைவே. இது ஒரு ஹிஸ்டீரியா அனுபவமே தவிர தூய ஆவியின் செயற்பாடல்ல. கடவுளை அறியாத புற மதங்களிலும், மதங்களோடு தொடர்பற்ற மனிதர்கள் மத்தியிலும் இத்தகைய செயல்கள் பொதுவாகவே நடைபெற்று வருகின்றது. இவற்றோடு கிறிஸ்துவை சம்பந்தப்படுத்த முயலும் ஒரு முயற்சியே பென்ஸகோலா எழுப்புதல்.



2. இக்கூட்டங்களில் எந்தவித வேதப்பிரசங்கமோ, நற்செய்திப் போதனையோ கொடுக்கப்படாமல் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன்வருமாறு மக்களுக்கு அழைப்புக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு வந்தவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கப்படு கிறார்கள். இது வேதத்திற்குப் புறம்பான ஒரு முயற்சி. பேசப்படும் கர்த்தருடைய வார்த்தையே பரிசுத்த ஆவியினால் பயன்படுத்தப்பட்டு, ஒருவரது வாழ்க்கை யில் கிருபையின் மூலமாகக் கிரியை செய்யும் என்று வேதம் போதிக்க, ஒரு பெருங்கூட்டமே இன்று தொடர்ந்து மனித முயற்சியால் மக்களைக் கர்த்தரிடம் கொண்டு வரும் காரியத்தில் ஈடுபட்டு வருகின்றது. இதையே பென்ஸகோலாவிலும் பார்க்க முடிகின்றது. இவ்வாறு சபைக்குள் கொண்டு வரப்பட்டவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழமுடியாமல் மீண்டும் பழைய வாழ்க்கைக்குத் திரும்பிப்போன கதைகள் ஏராளம். அப்படி சபைக்குள் கொண்டு வரப்பட்டவர் களை ஓடிவிடாமல் தொடர்ந்து வைத்திருக்கவே இன்று அநேக சபைகளில் ஆட்டம், கூத்துக்கள், இசை நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்பட்டு வருகின்றன.

பென்ஸகோலா எழுப்புதல் இன்று பல நாடுகளிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் பரவசக்குழுவின் நாடகங்களில் ஒன்றே. யொங்கி சோ, ரொட்னி பிரவுன், கில் பெட்ரிக், ஹில் போன்ற போலிச் சாமிகள் இருக்கும் வரை அவர்களை நம்பி ஏமாந்து போகும் கூட்டமும் இருக்கவே செய்யும். பத்தொடு பதினொன்றாக நாமும் இதில் சேர்ந்துவிடாமல் இருந்தால் சரி.

# எண்ணங்கள்

### தூய வாழ்க்கை

பத்திரிகை முதன் முதலாகக் கிடைக்கப்பெற்றேன். தூய வாழ்க்கை என்ற தலைப்பில் இடம் பெற்ற செய்தி மிகவும் பிரயோஜனமாகவும் எச்சரிப்பின் செய்தியாகவும் இருப்பதை உணர்ந்தேன். மெய்யாகவே தேவன் எம்மிடம் எதிர்பார்ப்பது தூய வாழ்க்கை என்பதை ஆழமாகப் புரிந்து கொண்டேன். பத்தரிகை மாதா மாதம் வராதா என்று ஏங்குகிறேன்.

எஸ்.ராஜ்குமார், சிதம்பரனார் மாவட்டம், தமிழ்நாடு

திருமறைபோதிக்கும் தூய வாழ்க்கை என்னுடைய ஆவிக் குரிய வாழ்க்கைக்கு பிரயோசனமாக இருந்தது. இதன் மூலம் தேவன் அநேகருடைய மனக்கண்களைத் திறப்பா ராக.

ஜனோ, தூத்துக்குடி, தமிழ்நாடு

### புதிய சுவிஷேசக் கோட்பாடு

புதிய சுவிஷேசக் கோட்பாடு கட்டுரை அருமை. நீங்கள் சொல்வது போல் போலிப்போதனகளை இனங்கண்டு கொள்ள மிகவும் உதவும். இதனை புத்தகமாக வெளியிடு வீர்களா? அவசியம் வெளியிட வேண்டுமென்று விரும்பு கிறேன்.

எம். அற்புதராஜ், தஞ்சாவூர், தமிழ்நாடு

### மேலும் சில புதிய வாசகர்களிடமிருந்து . . .

போதகர் நண்பர் ஒருவர் பத்திரிகையை எனக்கு அறிமுகப் படுத்தினார். பத்திரிகை எனது கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. நான் தந்துள்ள எனது நண்பர்களின் முகவரிக்கும் தயவு செய்து பத்திரிகையை அனுப்புங்கள்.


சகோ. இ. காந்தி, சென்னை, தமிழ்நாடு

திருமறைத்தீபம் இதழ் ஒரு சகோதரன் மூலமாகக் கிடைத் தது. இந்த நாட்களில் மறைந்து போய்க் கொண்டிருக்கும் சத்தியங்கள் மிகத் தெளிவாக எழுதப்பட்டிருப்பதைக் கண்டு சந்தோசமடைந்தேன். பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்புங்கள்.

ஐ. ஜோன், தூத்துக்குடி, தமிழ்நாடு

என்னுடைய போதகர் மூலம் பத்திரிகை கிடைத்தது. எனது ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல பத்திரிகை துணையாக இருக்கும். தொடர்ந்து அனுப்பி வையுங்கள்.

வி. வி. குரூஸ், மன்னார், ஸ்ரீலங்கா



## உள்ளே . !


1. போல் யொங்கி சோ
2. ஊழிய அழைப்பு
3. கிருபையின் போதனைகள்
4. யார் சீர்திருத்தவாதி?
5. வில்லியம் கேரி
6. கிறிஸ்தவக் கோட்பாடுகள்
7. கிருபையின் கோட்பாடுகள்
8. பென்ஸகோலாவில் “டொரான்டோ சிரிப்பலை மாயம்”
9. எண்ணங்கள்